விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 வைகாசி 29 ஷஃபா 19 இதழ் 119
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12—6—82



MASTER
INSTITUTES
B. M. C. LANE, JAFFNA.
83 AUGUST
புதிய வகுப்புகள்
தூய, பிரயோக கணிதம்
திரு. கிருஷ்ணு B. Sc.
ஆரம்பம் 13-6-82
3526


## சீனி
### விலை குறைந்தது
### கிலோ 12 ரூபா

[கொழும்பு]

சீனியின் விலை கிலோ ஒன்று 12 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது

இப்போது சீனி கிலோ 14 ரூபா 20 சதத்துக்கு விற்கப்படுகிறது.

புதியவிலை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வருகிறது என்று உணவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. [இ]

★ பாராளுமன்றத் தெரிவுக்குழு அரசியல் நோக்குடையது

# சு. க. வின் உள் விவகாரங்களில் தலையிட அரசுக்கு உரிமையில்லை

## தேர்தலில் தோற்கடிக்கும் முயற்சி இது என்கிறார் 'சரத்'

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உள்விவகாரங்களில் அரசு தலையிடுகிறது. இவ்வாறு தலையிட அரசாங்கத்துக்கு எதுவித உரிமையும் கிடையாது. எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுதந்திரக்கட்சியைத் தோற்கடிப்பதற்காகவே இப்போது அக்கட்சிக்கு எதிராக பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படுகிறது. இதுமுற்றிலும் அரசியல் நோக்குடையது.

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம நேற்று முன்தினம் இரவு பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் இல்லத்தினுள் ஆறு சாக்குகளில் பணம் கொண்டு செல்லப்பட்டதாக திரு. ஆர்: பி. விஜயசிறி தெரிவித்த கூற்று தொடர்பாக ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்படுவது குறித்து பிரேரணை மீதான விவாதத்தில் திரு, சரத் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந்த ஆண்டை ஜனாதிபதி தேர்தல் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ள இவ்வேளையில் நியமிக்கப்பட இருக்கும் இத் தெரிவுக்குழுவின் விசாரணைகள் எதிர்வரும் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு எதிராகவே பயன்படுத்தப்படும்.

இத்தெரிவுக்குழுவின் விசாரணைகள் முடிவடைந்து அறிக்கை வெளிவரும்போது இந்தப்பாராளுமன்றம் கலைக்கப்பட்டு விடும்.

எனவே அரசியல் நோக்குடன் மேற்கொள்ளப்படும்

(8-ம் பக்கம் பார்க்க]

சிறிமா இல்லத்துக்கு வந்ததாகக் கூறப்படும் பண மூடை விவகாரம்:

## றெனி தலைமையில் தெரிவுக் குழு நியமனம்

[கொழும்பு]

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் கொழும்பு றெஸ்மீட் பிளேஸ் இல்லத்துக்கு வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் காரில் 6 சாக்குகளில் பணம் கொண்டு வரப்பட்டது என ஹரிஸ்பத்துவ எம். பி. திரு. ஆர். பி. விஜயசிறி பாராளுமன்றத்தில் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரிப்பதற்கு நிதி அமைச்சர் திரு. றெனி டி மெல் தலைமையில் தெரிவுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் இக்குழுவின்

(8ம் பக்கம் பார்க்க)

## 'நான் லட்சாதிபதியாக அநுராவே காரணம்''
### சபையில் பிரதமர் பிரேமதாச

(கொழும்பு)

''என்னை ஒரு லட்சாதிபதி என்று திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நாடு முழுவதும் கூறிவருகிறார்.

நான் லட்சாதிபதியாவதற்கு திரு. அனுரா பண்டாரநாயக்கா தான் காரணகர்த்தாவாக இருந்தார்''.

இவ்வாறு பிரதமமந்திரி திரு. ஆர் பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

பிரதம மந்திரி திரு. பிரேமதாசா நேற்றுமுன்தினம் தாம் சபையில் பேசியது சிலபத்திரிகைகளில் தவறாக வெளிவந்திருக்கிறது என்றும், அதனைத் தெளிவுபடுத்த விரும்புவதாகவும் கூறி சில தகவல்களை வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

''ஜாஎலையில் நான் பேசிய பச்சொன்று பற்றி 'டைம்ஸ் ஒப்சிலோன்' பத்திரிகையில் வெளிவந்த செய்தி பற்றி திரு. அனுரா பண்டாராநாயக்காவுக்கும் 'அத்த' பத்திரிகைஸ்தாபனத்துக்கும் எதிராக நான் வழக்கொன்று பதிவு செய்தேன். திரு அனுரா பண்டாரநாயக்காதாம் உண்மையென்று கருதி என்னைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தது தவறு எனப்

(8-ம் பக்கம் பார்க்க)

முதல் டெஸ்ட்
### இங். 433
### இந். 5-92

லண்டன், ஜூன் 11

இங்கிலாந்து - இந்திய முதலாவது டெஸ்டின் 2-வது நாள் இறுதியில் இந்தியா 5 விக்கட்டுகளை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இங்கிலாந்து வீரர்கள் அபாரமாக ஆடி முதல் இன்னிங்ஸில் 436 ஓட்டங்களைப் பெற்றனர். டெரக் றண்டல் 126 ஓட்டங்களைப பெற்றார். கபில்தேவ் 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

கவாஸ்கர் 41 ஓட்டங்களுடனும், கபில்தேவ் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருக்கின்றனர். (இ)

யாழ் - கொழும்புத்துறை தபால் நிலையங்களிலிருந்த

## மூன்று குண்டுப் பார்சல்கள் வெடிக்கவைக்கப்பட்டன
### ஒன்று பகுப்பாய்வுக்காக உள்ளது

(யாழ்ப்பாணம்)

கைக்குண்டுகள் இருப்பதாக சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பார்சல்களில் மூன்று பலத்த பாதுகாப்பின் மத்தியில் வெடிக்க வைக்கப்பட்டன. ஒன்று இரசாயன பகுப்பாய்வுக்காக பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது

கொழும்புத்துறை உப தபால்கந்தோரில் வைக்கப்பட்டிருந்த கைக்குண்டுப்பார்சல் முதல் வெடிக்கவைக்கப்பட்டது பின்புயாழ். பிரதமதபால் கந்தோரில் வைக்கப்பட்டிருந்த மூன்று பார்சல்களில் இரண்டு வெடிக்கவைக்கப் பட்டன,

ஒரு பார்சல் இரசாயன பகுப்பாய்வுக்காக யாழ். தபால் கந்தோரில் பொலிஸ் பாதுகாப்புடன் ஒரு அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10-45 மணியளவில் கொழும்புத்துறை உபதபால்கந்தோரில் பிரிகேடியர் வீரதுங்க, வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. அ நவரத்தினம், கொழும்பிலிருந்து வந்த பிரதம தபால் அதிகாரி திரு. பெரேரா, இரசாயன பகுப்பாய்வாளர் திரு. எஸ். சிவலோகநாதன் ஆகியோர் முன்னிலையில் இக்குண்டு வெடிப்பு நிகழ்ச்சி இடம் பெற்றது. சுமார் 50 இராணுவவீரர்களும் பாதுகாப்பாக இருந்தனர். இச்சம்பவத்தின்போது மக்கள் நடமாடாமல் தடுப்பதற்காக உபதபால்நிலையத்துக்கு அண்மையிலுள்ள சந்திகளிலும் பொலிஸ் பாதுகாப்பளிக்கப்பட்டிருந்தது.

### முதலாவது குண்டு வெடித்தது

உபதபால் நிலையத்துக்கு

(8ம் பக்கப் பார்க்க]

## அமைச்சர் மத்யூ பெயரிலும் வெடிகுண்டுப் பார்சல்

(புலோலி)

வெடிகுண்டு பார்சல், கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூவின் பெயருக்கும் அனுப்பப்பட்டிருந்தது பருத்தித்துறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஐக்கிய தேசிய்கட்சி அமைப்பாளர் திரு. சந்திரசேகரம் அனுப்புவதாக மேற்படி பார்சலில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்

(8 ம் பக்கம் பார்க்க)

பார்சல்களை அவதானத்துடன்
## ஏற்குமாறு பணிப்பு
### தபால் மா அதிபர் சுற்றுநிருபம்

(கொழும்பு)

பார்சல்களை ஏற்கும் போது மிகவும் அவதானத்துடன் கையேற்குமாறு நாடுமுழுவதிலும் உள்ள தபால் நிலையங்களுக்கும் உபதபால் நிலையங்களுக்கும் தபால் மா அதிபர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

தபால் மா அதிபர் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பியுள்ள சுற்று நிருபத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சந்தேகத்திற்கிடமான பார்சல்களைக் கொண்டுவருபவர்களை அடையாளம் காண வேண்டும்.

அவசியம் ஏற்படும் பட்சத்தில் சந்தேகத்திற்கிடமான பார்சல்களைத் திறந்து காட்டுமாறு அவர்களைக்கேட்க வேண்டும்.

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

15-20 வயதுக்குட்பட்ட ஆண்கள் கடைவேலைக்குத் தேவை. விளம்பர இல: 3497 மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். 3497

பரந்தன் றெட்பானா குடியேற்ற மக்களுக்கு முருங்கைத் தடி தேவையாக இருக்கிறது. மேலதிகமாக வைத்திருப்பவர்கள் தந்துதவவும். இலவசமாக நாம் வினியோகிப்போம், மில்க்வைற் சோப் தொழிலகம், யாழ்ப்பாணம். 3504

ஆங்கில மருந்துகளை வானில் சென்று விற்பனை செய்ய விற்பனை பிரதிநிதிகள் தேவை. விண்ணப்பிக்க விளம்பர இல. 3509, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3509

## விற்பனைக்கு

கொக்குவில்குளப்பிட்டிச்சந்திக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி உண்டு. சிவநேசன் வீடு, மஞ்சவனப்பதி றோட், கொக்குவில் மேற்கு. (3520)

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து 20 யார் தூரத்தில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3521, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (3521)

## நினைவு அஞ்சலி

தம்பிப்பிள்ளை தர்மகுலசிங்கம்
தோற்றம்: 13-2-1950
மறைவு: 12-6-1975

★

தம்பிப்பிள்ளை தில்லைநடராசா
தோற்றம்; 10-3-1962
மறைவு: 12-6-1981

★

ஆருத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத்துயிலை அரவணைத்த எமது அருமைச் செல்வங்களுக்கு இறைவா ஆத்மசாந்தியளித் தருள்வாய்.

உங்கள் நினைவுத்துயரில் உழலும்
அப்பா, அம்மா,
சகோதரங்கள்,
அத்தான்மார்,
அண்ணிமார்,
மருமக்கள் பெருமக்கள்,

பிரதான வீதி,
மாதகல். (3515)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# "எனது சகமாணவர்களை மீண்டும் நான் சந்திப்பது ஆச்சரியமாக உள்ளது!"

## விமலராஜாவின் உருக்கமான பேச்சு

[யாழ்ப்பாணம்]

''எனது மாணவர்கள் முன்பாக நான் நிற்கின்றேனு என்று என்னால் நம்பமுடியவில்லை. உங்களுக்கு எப்படி நான் நன்றிக்கடன் செய்வதென்றுஎனக்குப் புரியவில்லை. வாழ்க்கையில் எதிர்பாராத நிலைகள் ஏற்பட்டன. உங்களைச் சந்தித்தது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது''

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால்அளிக்கப்பட்ட வரவேற்புக்குநன்றிதெரிவித்து உரையாற்றிய மாணவன் திரு. அ.விமலராசா மாணவர்களின் கரகோஷத்தின் மத்தியில்உரையாற்றுகையில் தெரிவித்தார்.

உடல் தளர்ந்த நிலையில் காணப்பட்ட திரு.விமலராசா, உற்சாகமற்ற நிலையிலும், மிக மெதுதாகவும் சுருக்கமாகவுமே உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''நான் தொடர்ந்தும் உங்களுடன் இருந்து படிக்க விரும்புகிறேன் உங்களுக்கு நான் என்றும் நன்றி மறவாதவனாக இருக்கின்றேன். எமது மாணவர் அவையின் தலைவர் திரு.இராசநாயகத்திற்குஎனது சார்பிலும் எனது குடும்பத்தின் சார்பிலும் நன்றிதெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். எனது நிலையை உணர்ந்து எனக்காகத் துடித்த என் மாணவசமுதாயத்திற்கு எனது நன்றிகள்'' என்றார்.

வரவேற்புக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த மாணவர் அவையின் செயலாளர் திரு. எஸ். ஸ்ரீசற்குணராசா பேசுகையில் கூறியதாவது: ''எமது சகமாணவன் காரணமில்லாமல் கைதாகி சித்திரவதைக்குட்பட்ட நிலை உணர்ந்து மாணவர்கள் உள்ளத்தால் வெதும்பினர். ஆனால் 300 நாட்களின்பின்னரே போராட்டம் செய்யத்தொடங்கினோம். இதன் பின்னரே அரசியல்வாதிகளும் குரல் கொடுத்தனர். இந்த நிலையால் சிலர் எமது மாணவர் தலைவனையே எதிர்த்தும் பிரசாரம் செய்ய முற்பட்டனர். ஆனால் எமது போராட்டத்தின் வெற்றியே இன்றைய இந்த வரவேற்பாகும்.''

பொருளியல்விரிவுரையாளர் திரு வி.பி.சிவநாதன் பேசுகையில் கூறியதாவது: இன்றைய வரவேற்பு மாணவ சமுதாயத்தின் ஒரு வெற்றித்தினமாகும். திரு.விமலராசா 400 நாட்கள் உங்களுடன் சேர்ந்திருக்காது, சுயவாழ்க்கையை இழந்திருந்தார். இவரது வரவு மாணவ சமூகத்தின் வெற்றியின் அறிகுறியாகும். இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் இந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களது போராட்டம் சரித்திரம் கூறும் ஒரு பெரும் வெற்றிப் போராட்டமாகும். போராட்டங்கள் நடத்த முற்பட்ட பல சக்திகள் இந்த அரசின் சட்டங்களுக்கும், அடக்குமுறைகளுக்கும் எதிர்முகம் கொடுக்கமுடியாது தோல்விகண்ட சரித்திரமும் இருக்கிறது. இந்தநிலையில் மாணவர் போராட்டமே இந்த வெற்றிக்குக் காரணமாகும். மாணவர்களது இந்தபோராட்டத்திற்கும் இதில் அவர்கள் கண்டவெற்றிக்கும் எம்நாட்டு தினசரிகளும் உதவி புரிந்துள்ளன. இதை மாணவ சமுதாயம் மறக்கமுடியாது.

இதுகாலவரை இந்த இராமநாதன் மண்டபம் கண்டிராத மாணவ சமுத்திரத்தை இன்று தான் காணமுடிகிறது. இந்த ஒருமைப்பாடு எல்லா நலன்களுக்கும்பயன்படவேண்டும்'' என்றார்.

மாணவ அவையின்நடவடிக்கைக்குழு உறுப்பினர் திரு, சு. ஸ்ரீஸ்கந்தராசா பேசுகையில் கூறியதாவது:-

பல்கலைக்கழக மாணவர்களின் உரிமைக்குரல்தான் எமது போராட்டத்தை வலுப்படுத்தி இன்று வெற்றியையும் தந்தது. விமலராசாவுக்காக மாணவர்கள் தொடுத்த போராட்டம்தான் சில தமிழ் இளைஞர்களையும் விடுவிக்க வகைசெய்தது. எனலாம். அடக்குமுறைக்கு மண்டியிட்டுக் கிடந்த அரசியல் சுயநலவாதிகள் சிலர் விமலராசா. விடுதலை செய்யப்பட்ட பின்னும் இதுபற்றி பேச்சுவார்த்தைகளை நடத்த எமது மாணவர்கள் தலைவரையும் கொழும்புக்கு அழைத்துள்ளனர் இது என்ன பித்தலாட்டமோ தெரியாது''

[இந் நேரத்தில் மண்டபத்திலிருந்து சிலகுரல்கள் எழுந்தன, இதனால் கைகலப்பு உருவாகும் நிலை தோன்றி உடன் மறைந்து விட்டது.]

திரு. ஸ்ரீஸ்கந்தரா தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:-

''நாம் பல்கலைக்கழக மாணவர்கள். இந்த மாணவர்களிலிருந்து பல சக்திகள் உருவாகி நாட்டுக்குப் பயன்கொடுக்க தகுதியுள்ள வல்லவர்கள்தான் நாம். சாதாரண பாமர மக்களாகக் கருதிச் சில அரசியல்வாதிகள் எம்மையும் பகடைக்காய்களாக ஆக்க முயல்வதை நினைக்க வெட்கமாக இருக்கிறது. எமது சக்தியை வேறு பயனற்ற அரசியல் வேட்டைக்கு யாரும்பயன்படுத்தவும் முடியாது'' என்றார்.

உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேசுகையில் கூறியதாவது:

''நாட்டில் பலவிதமான சிக்கல்கள் தோன்றி மறைவதை நாம் காணமுடிகிறது. விமலராசாவின் நிலையிலும் ஒரு சகாப்தம் தோன்றி மறைந்துள்ளது. இந்த நாட்டில் கொடுங்கோலாட்சி நடக்கும் போது அதாவது 8 வருடங்களுக்கு முன் தமிழாராய்ச்சி மகாநாடு நடந்தசமயம் கண்ட காட்சிகள், நடந்த சம்பவங்கள் எமது ஞாபகத்திற்கு இன்று வருகின்றன எமது ஒற்றுமைதான் எமக்கு வெற்றியைக்கொடுக்கவல்லது. எதிலும் நாம் ஒற்றுமையாக நடவடிக்கை எடுப்பதின்மூலம் தான் வெற்றிகாண முடியும்'' என்றார்.

மாணவர் அவையைச் சேர்ந்த திரு. இளவழவன் பேசுகையில்; இலங்கையின் எந்தப் பகுதியில் உள்ள எந்த ஒரு மாணவனுக்கு இன்னல் வந்தாலும் அதற்காகக் குரல்கொடுக்க, போராட நாம் கடமைப்பட்டவர்கள் மாணவ சமுதாயத்தின் உணர்வுகளை, உரிமைகளை, ஒற்றுமையை நாம் இழக்கமுடியாது பெண்கள் சுதந்திரத்தை எமது மாணவிகள் எமது போராட்டத்தில் எடுத்துக்காட்டியதில் யாழ் பல்கலைக்கழகமும் பெருமைப்படவேண்டும். ஆண்களுடன் சரிநிகர் சமானமாக உரிமைப்போர் நடத்த எமது மாணவிகளும் தகுதிபெற்றவர்கள் என்பதை எடுத்துக்காட்டியுள்ளதை நாம் இத்தினத்தில் ஞாபகப் படுத்தாமல் இருக்க முடியாது. மாணவர்களாகிய நாம் சமுதாய விடுதலையையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்'' என்றார்.

திரு. எஸ். நாகேஸ்வரன் நன்றியுரை வழங்கினார்.

(வண்–நிரு)

## நல்லூரில் நாளையக்ஞம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையில்ஐந்து சிவாச்சாரிகள் முன்னின்று மஹாகணபதி–லக்ஷ்மி–நவக்கிரகயக்ஞம் நடைபெறவுள்ளது.

பெரும் பொருட் செலவில் பொதுநலன் கருதி இந்த யக்ஞம் நடைபெறுகிறது. (சி)


## அந்தியேட்டி அழைப்பு

காலமெல்லாம் எம்மை கண்ணீர் கடலில் ஆழ்த்திவிட்டு இறைவனடி எய்திய எங்கள் குடும்பத்தீபத்திற்கு எமது அஞ்சலி. — குடும்பத்தினர்.



ச. ஜெயரட்ணம் (ஜெயம்)
தோற்றம்: 12-12-1938
மறைவு: 13-05-1982

எமது அன்புத்தந்தையின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (12-6-1982) சனிக்கிழமைகாலை நடைபெறவிருப்பதால் அவ்வமையம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகைதந்து இவ் வைபவத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பிள்ளைகள் (அபுதாபி)
சகோதரர்கள்,
மைத்துனர்கள்
493, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

3517

## வெற்றிடங்கள்

அச்சுவேலி தொழில்பேட்டையில் புதிதாக ஆரம்பிக்கப்படும் (SODIUM SILIEATE PLANT) தொழிற்சாலைக்கு பின்வரும் ஸ்தானங்களுக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) FOREMAN (Electrical)
(2) FOREMAN (Mechanical)
(3) SHIFT SUPERVISORS
(with knowledge of Chemistry)
(4) UNSKILLED LABOURERS

பின்வரும் விலாசத்திற்கு உடனடியாக அத்தாட்சிப்பத்திரங்களுடன் காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை சமுகந்தரவும்.

**Mushira Industries Ltd.**
**Industrial estate**
ATECHUVELY.

3519

'பியர்'
அதன் முழுச் சுவையுடன்.
லயன் லாகர்



ரூபா 15/75

MASTERS

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

மேற்படி தேவஸ்தானத்தில் 31-8-1981–ந் திகதி பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து பல பாரிய திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. 22-6-1982–ந் திகதி ஆரம்பமாகவிருந்த வருடாந்த மகோற்சவ தினத்திற்குள் திருப்பணி வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் செய்ய முடியாதிருப்பதால் இவ்வாண்டு வருடாந்த மகோற்சவம் நடைபெறமாட்டாது என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

இவ்வாலயத்தில் நடைபெறும்
திருப்பணி வேலைகளுக்கு நிதி வசூல் செய்ய எவரும்
நியமிக்கப்படவில்லை என்பதையும்,
திருப்பணி வேலைகளுக்கு நிதி நல்க விரும்புவோர்
தனாதிகாரி,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்,
நயினாதீவு
என்ற முகவரிக்கு அவற்றை அனுப்பி உதவலாம் என்பதையும் அறியதருகிறோம்.

மேலும் வருடாந்த மகோற்சவம் நடைபெறும் எனக் கூறி அன்னதானம், தாகசாந்திப்பணி ஆகியனவற்றிற்கு நிதியோ, பொருட்களோ சேகரிக்க வரும் எவருக்கும் எதுவும் வழங்க வேண்டாம் என்பதையும் அறியத்தருகிறோம்.

தர்மகர்த்தா சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.
நயினாதீவு 5-6-1982. (3514)

# யுத்தநிறுத்த கோரிக்கை நிராகரிப்பு

# இஸ்ரேல் தொடர்ந்து ஊடுருவல்

## அமெரிக்காவுக்கு ரஷ்யா கவலை தெரிவித்துள்ளது

லண்டன், ஜூன் 11

பெய்ரூட் நகரத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் இஸ்ரேலிய படைகள் நேற்று மீண்டும் வானத்தில் நடந்த பயங்கரச் சண்டையில் வெற்றியடைந்துள்ளன!

அமெரிக்காவின் யுத்தநிறுத்தக் கோரிக்கையையும் நிராகரித்து இஸ்ரேலிய படைகள் லெபனுனுக்குள் நீண்டதூரம் ஊடுருவல் செய்து முன்னேறிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு லெபனுனில் அங்கு இஸ்ரேலிய படைகளை எதிர்த்துப் போராடுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை என சிரியா படைகள் அறிவித்துள்ளன.

இதேசமயம் சோவியத் ரஷ்யா, அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் இஸ்ரேலின் நடவடிக்கைபற்றி கவலை தெரிவித்துள்ளது. (க)

## ஏடனிலும் யாழ். நூலக வாரம்!

ஏடன், ஜூன். 11

தென்யேமன் நாட்டின் தலைநகரான ஏடன் நகரில் யாழ். பொதுசன நூலக வாரம் கொண்டாடப்படவுள்ளது.

கொழும்பில் சமீபத்தில் நடைபெற்ற நூலகவாரத்தின் போது யாழ். முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தமிழர் வாழுமிடங்களில் எல்லாம் நூலகவாரம் கொண்டாடப்படுவது அவசியமென வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதற்கமைய ஏடன் நகரிலுள்ள ஐ. நா. வளர்ச்சித்திட்ட அலுவலகத்தில் பணியாற்றும் திரு. க சச்சிதானந்தம் ஏடன் நகரில் தாம் யாழ். நூலகவாரம் கொண்டாட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மாநகரசபைக்கு அறிவித்துள்ளார்.

திரு. சச்சிதானந்தம் சில மாதங்களுக்கு முன்னர் யாழ். மாநகரசபைக்கு ரூபா 15,000 பெறுமதியான நுண்காட்டி கருவியொன்றையும் அன்பளிப்புச் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. [சி]

ஒரிசாவில்

## புயலுக்கு 240 பேர் பலி

புதுடில்லி, ஜூன் 11

ஒரிசாவில் புயலுக்குப் பலியானவர்களின் தொகை 240 ஆக அதிகரித்துள்ளது.

7 மாவட்டங்களில் புயலினுல் 67 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ருகிங்: தடை!

புதுடில்லி, ஜூன். 11

கல்வி நிலையங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் இந்தக் கல்வியாண்டிலிருந்து 'ருகிங்' தடைசெய்யப்பட்டுள்ளது.

'ருகிங்' செய்யும் மாணவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என மத்திய கல்விஅமைச்சர் அறிவித்துள்ளார்.

இதற்கான சட்டம்கொண்டு வரக் காலதாமதமாகும் என்பதால், கல்விநிலையங்கள் இதில் அக்கறை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (க)

குண்டுவெடிப்புசம்பவம்

## 5000 ரூபா வழங்க முடிவு

புதுடில்லி, ஜூன் 11

அசாம் குண்டுவெடிப்பில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு தலா5000 ரூபா வழங்க அசாம் அரசு முடிவுசெய்துள்ளது.

காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு 1000 ரூபாவிலிருந்து 4000 ரூபாவரை வழங்கப்படும்.

பலியானவர்களின் இறுதிச் சடங்குகளுக்கான செலவுகளையும் மாநில அரசு ஏற்றுக்கொள்ளும். (க)

ஆதி திராவிடர் கொலை:

## 12 பேர் கைது நால்வர் சரண்

சென்னை, ஜூன். 11

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கிராமமொன்றில் ஆதிதிராவிடரொருவர் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆசிரியர் ஒருவர் உட்பட நால்வர் பொலிஸில் சரணடைந்துள்ளனர். பொலிசார் ஏற்கனவே 12 பேரைக் கைதுசெய்துள்ளனர். (க)

'சுயம்வரம் மூலம்'

## 17 மணப்பெண்கள் கணவரைத் தெரிவுசெய்தனர்

சென்னை, ஜூன். 11

சேலத்தில் நடந்த 'சுயம்வரத்தில்' 17 மணப்பெண்கள் தங்கள் கணவர்களை தேர்ந்தெடுத்தார்கள்.

மண்டபமொன்றில் 25 இளைஞர்கள், தங்கள் பெற்றோர், உறவினர்களுடன் வந்து அமர்ந்திருந்தனர்.

பல்வேறு பிரிவைச்சேர்ந்த 17 இளம்பெண்கள், அங்கு சமுகமளித்தார்கள்.

ஒவ்வொரு பெண்ணின் பெயரும் கூப்பிடப்பட்டதும், இளைஞர்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்து, ஒவ்வொரு இளைஞரைசப் பார்த்து தங்கள் கணவரை தெரிவுசெய்துகொண்டனர். 8 இளைஞருக்கு திருமணம் நடக்கவில்லை.

திருமணத்தின்பின் விருந்துபசாரமும் நடைபெற்றது. (க)

## வாயுவில் இயங்கும் பிரெஞ்சு விமானம்!

பாரிஸ், ஜூன் 11

வாயுவில் இயங்கும் விமானமொன்றை பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்துள்ளார்,

நேற்று முன்தினம் இவ் விமானம் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. அப்போது ஏனைய விமானங்களைப் போலவே இவ் விமானமும் மேலெழுந்து சுமுகமாகப் பறந்தது.

இவ்விமானத்துக்கான வாயுவை கொள்கலமொன்றில் தேவைக்கேற்றவாறு நிரப்பி விமானியின் இருக்கைக்குப் பின்னுல் பொருத்திவிடப்பட்டதும் அக்கொள்கலத்திலிருந்து பெறப்படும் வயுாமூலமாகவே விமானத்தின் முக்கிய பாகங்கள் இயங்கும்.

நாளடைவில் வாயுமூலமாக விமானங்கள் திறம்பட இயங்க ஆரம்பித்ததும் தற்போது ஏற்பட்டிருக்கும் விமானங்களுக்கான எரிபொருள் செலவீனங்கள் குறைவதுடன் நவீன விமானங்களிலிருந்து வெளியேறும் புகையினுல் வான் மண்டலமும் சுற்றுடலும் அசுத்தமடைவது நீங்கிவிடுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்டவாறு வாயுவில் விமானத்தை இயக்குவதில் வெற்றிகண்ட பிரான்ஸ்நாட்டு விஞ்ஞானியை அந்நாட்டு அரசாங்கம் விருது வழங்கிக் கௌரவித்தது. (கி)

## "உதவித்தபாலதிபர் மரணம் ஓர் அநியாயப்பலி"

— இராசலிங்கம் எம். பி.

[கரவெட்டி]

''யார் யாரோ எவரெவருக்கோசெய்த அநியாய நடவடிக்கையினுல் கண்ணியம்மிக்க ஊழியர் பலியானது பெரும் அநியாயமாகும்.''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் மாங்குளத்தில் இடம்பெற்ற தபால் ரயில் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பலியான நடபாடும் தபால் பிரிவு உதவித் தபால் அதிபரான பொ. இராசையாவின் இறுதி ஊர்வலத்திற்கு முன்னர் நடைபெற்ற இரங்கலுரையில் அனுதாபம் தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்,

இறந்த இராசையாவின் இறுதிக் கிரியைகள் மண்டானில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

உடுப்பிட்டி எம்.பி. தனது இரங்கலுரையில் மேலும் தெரிவித்ததாவது:

''அமரர் இராசையா ஆசிரியராக இருந்து படிப்படியாக முன்னேறித் தபால் திணைக்கள உதவித் தபால் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கையில் அநியாயமாகப் பலியாகியுள்ளார்.

''நான்கு வயது முதல் ஒன்பது வயதுவரை உள்ள அவரது ஐந்து பிள்ளைகளும் குடும்பமும் இன்று அநாதைகளாகிவிட்டன. இதைநினைக்க மனம் வேதனையடையாமல் இருக்க முடியாது. அநியாயப் பலியினுல் அவரது குடும்பத்தில் ஈடுசெய்யமுடியாத கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுள்ளது.''

தபால் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் தொழிற்சங்கப் பிரமுகர்கள், கிராமப்பிரமுகர்கள் ஆகியோரும் இரங்கலுரை நிகழ்த்திஞர்கள். இறுதி ஊர்வலத்தில் பெருந் திரளான மக்கள்கலந்துகொண்டார்கள்

அ

## ஜனுதிபதி தேர்தல்: தி.மு.க. நிலைஎன்ன

சென்னை, ஜூன். 11

''இந்திய ஜனுதிபதி தேர்தலில் தி. மு. க வின் நிலைபற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும். இம்மாதம் 26ம் திகதி நடைபெறவுள்ள தி. மு. க. வின் செயற்குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பாக தீர்மானிக்கப்படும்''.

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணுநிதி சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

பிரதமமந்திரி தி. மு. க. வின் ஆதரவை ஜஞதிபதி தேர்தலுக்குக் கோரியுள்ளாரா என்று நிருபரொருவர் கேட்டபோது, அது பற்றி எதுவும் கூறமுடியாதென்று கருணுநிதி தெரிவித்தார். (வெ)

## தாக்குதல் நடத்தவில்லை

லண்டன், ஜூன் 11

ஈராக் படைகள் யுத்த நிறுத்த அறிவித்தலைத் தொடர்ந்து நேற்று தாக்குதல் எதுவும் நடத்தவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது

[க]

## ஈரான் குற்றச்சாட்டு

லண்டன், ஜூன் 11

இஸ்ரேல் படைகளுக்கு அமெரிக்கா அங்கீகாரம் அளித்துள்ளதாக ஈரான் குற்றஞ்சுமத்தியுள்ளது. [க]

## 250 பேர் பலி!

சென்னை, ஜூன் 11

ஓரிஸாவில் வீசிய புயலில் மாண்டவர்களில் 68 பேரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இப்புயலினுல் இதுவரை பலியானவர்களின் எண்ணிக்கை 250 ஆக அதிகரித்துள்ளது. [வெ]

## குடிசைகள் தீக்கிரை

சென்னை, ஜூன் 11

காமராஜ் நகரில் நேற்று நடந்த தீவிபத்தில் ஆதிதிராவிட மக்களின் 9 குடிசைகள் எரிந்து சாம்பலானது.

## மருந்துகள் தீக்கிரை

சென்னை, ஜூன் 11

சேலத்தில் நேற்று மருந்து விற்பனை நிலையத்தில் நடந்த தீவிபத்தொன்றில் சுமார் 50,000 ரூபா பெறுமதியான மருந்துவகைகள் தீக்கிரையாகின. [க]

## வெள்ளப்பெருக்கு 15பேர் பலி

சென்னை, ஜூன் 11

கர்நாடக மாநிலத்தில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கினுல் 15 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

## 2000 பேர்மீது வழக்குத்தாக்கல்

சென்னை, ஜூன். 11

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சங்கரன்கிராம பொலிஸ் இன்ஸ்பெக்டர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகநபர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது கட்டடங்களை சேதப்படுத்தியது; பஸ்களை தாக்கியது தொடர்பாக, 2000 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. [க]

## பாக். அதிபர் ஆஸ்பத்திரியில்

ராவல்பிண்டி, ஜூன். 11

பாகிஸ்தான் அதிபர் சிறுநீர் வியாதிக்காக ராவல்பிண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எப்போது அனுமதிக்கப்பட்டார் என்றவிபரம் தெரிவிக்கப்படவில்லை. (க)

## பிறப்பு விகிதம் குறைந்துள்ளது!

புதுடில்லி, ஜூன் 11

வளரும் நாடுகளில் பிறப்பு விகிதம் பெருமளவு குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது 60ம் ஆண்டு புள்ளிவிபரத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் கடந்த வருடம் பிறப்பு விகிதம் குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

கிரிக்கெட் டெஸ்ட்:

## இங்கிலாந்து 5: 82

லண்டன், ஜூன் 11

இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்குமிடையே லோட்ஸில் [illegible] முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் இங்கிலாந்து கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கட்டுகளை இழந்து 18 ஓட்டங்களை [illegible]

[illegible] 3 விக்கட்டுகளை கபில் [illegible] றினரென்பது [illegible] (வெ

### மணிவாக்கு

பெரும்பான்மையோரது நினைப்பே நிறைவேறுமாயினும் அது நேர்மையானதாக இருக்கவேண்டும்; சிறுபான்மையினருக்கு சமஉரிமை இருக்கவேண்டும்; ஒரே சட்டம் அனைவரையும் பாதுகாத்தல் வேண்டும்; அதற்கு முரண்பாடாக நடப்பது கொடுஞ்செயலாகும்.

—ஆபிரகாம் லிங்கன்

## நமது நோக்கு

# இயற்கையின் சீற்றமும் மனிதனின் கொடுமையும்

சென்ற வருடம் நாட்டின் சில பகுதிகளில் நடந்த இனக்கலவரங்களில் பலஅப்பாவி மக்கள் கொல்லப்பட்டதும், சொத்துக்களையும் உடமைகளையும்பறிகொடுத்ததும் மனிதகொடுமையால் ஏற்பட்ட அழிவு; இரத்த வெள்ளம் திட்டமிட்ட செயற்கைச்சம்பவம்.

இன்று அப் பகுதிகளில், சில இடங்களில் இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட பெருவெள்ளம் பல்லாயிரக் கணக்கான மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கியதோடு, ஆயிரக்கணக்கான வீடுகளை இருந்த இடம் தெரியாமல் அள்ளிக்கொண்டோடி விட்டது.

மண் சரிவால் மக்கள்உயிரிழந்த கோரச்சம்பவம் இத்தகைய அழிவின் உச்சக்கட்டம்; இறந்தவர்களின் உடம்புகளை எடுக்கமுடியாத நிலையில் வெள்ளம் பெருக்கெடுத்திருப்பதாகச்செய்தி. நாட்டுமக்கள் அனைவரின் அனுதாபத்துக்குரிய துன்ப சம்பவம்.

புயல், வெள்ளம், சூறுவளி போன்ற இயற்கை அழிவுகள் காலத்துக்குக் காலம் நாட்டில் இடம் பெறுவது வழக்கம்; இரத்தினபுரி, ஹினிதும, களுத்துறை, காலிமாவட்டங்கள் இன்றைய வெள்ளப் பெருக்கால் அதிகமானதாக்கத்துக்குள்ளாகின. இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள காவத்தை, ரக்குவானை, பலாங்கொடை எம்பிலிப்பிட்டிய இடங்களில்காணப்படும் இவ்வருட வெள்ள அழிவு சென்ற வருட இரத்தக்களரியையும் அங்கு இடம்பெற்ற மற்றும் சொல்லொணுக் கொடுமைகளையும் நினைவூட்டுவது இயல்பு; மனிதனும் இயற்கையும் இவ்வித கொடுமையில் போட்டி போடுகின்றனரா?

அன்று அவ்விடங்களில் மனிதன் மனிதனைவெட்டிக் கொன்று மனித ரத்தம் வெள்ளமாகப்பெருக்கெடுப்பதில் இன்பங்கண்டான். அது மனிதனுல்திட்டமிட்ட தீவினை. வேண்டுமென்றே வீடுகளையும் கடைகளையும் உடைத்து சொந்தக்காரரை அகதிகளாக்கினுன்.

இன்று சாதிமதபேதமற்ற அழிவை இயற்கை அன்னை ஏற்படுத்தியிருக்கிருள். இனத்துவேஷம்,மொழிமத பாகுபாடு ஒன்றுமே இல்லை.

விஞ்ஞானிகள் வெள்ளத்தைத் தடுப்பதற்கு, அணை கட்டுவதற்கு ஆவன செய்யக்கூடும்; இவ்வித விஞ்ஞான நிபுணத்துவம் ஒருமட்டுக்கே! என்ன பாதுகாப்பை ஏற்படுத்திய போதும், வேறு வகையில் அழிவுவரக்கூடும்தன்மையே கடந்தகால உலகவரலாறு காட்டுகின்றது. மனிதனின் சாமர்த்தியம் என்றுமே ஒருமட்டு!

''அரசன்அன்றறுப்பான்; தெய்வம் நின்றறுக்கும்'' என்பதில் பாமர மக்கள் நம்பிக்கை வைப்பதற்கு அனுபவ ரீதியில் சாரணம் இல்லாமலில்லை. ஆயினும் இதனை மாற்றியமைக்கநேரிடின், அரசன் அன்றறுக்கத் தவறினுலும் தெய்வம் தாமதிப்பதில்லையென்று இன்று கொள்ள இடம் உண்டு. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற முதுமொழி இன்றைய நிலையில் மிகப் பொருத்தமானது. மனிதன் துரிதப்பட தெய்வமும் துரிதப்படுதல் நியாயமே!

எந்தவழியிலும்—இயற்கை அல்லது செயற்கை—பொதுமக்கள், அப்பாவி மக்கள் அவலப்படுவதும், அழிவுக்குள்ளாவதும் நாம் அனைவரும் கண்ட, காணும் சோக நிகழ்ச்சிகள். இயற்கையின் சீற்றம் தவிர்க்க முடியாத நிலையில், மனிதாபிமானம் உள்ள மக்கள் ஒன்றுபட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க விரைய வேண்டும்.

அரசாங்கத்தை மட்டும் நம்பியிருக்காமல்,பொதுமக்கள் தேசிய ரீதியில் முகாம் அமைத்து வேண்டிய சேவையில் துரிதப்பட வேண்டும்; துரிதப்படுவார்கள்.

மனித வன்செயல்கள் தடுக்கக்கூடியவை; அதற்கு அதிக படிப்போ ஆராய்ச்சியோ தேவையில்லை. பழைய சரித்திரங்களைப் புரட்டுகின்ற இன, மத, தீவிரவாதிகள் தங்கள் கற்பனையில் காணும் கொடுமைகளையே அவசரமற்ற ஆராய்ச்சியில் புகுத்துகின்றனர். சிங்கள—தமிழ்த் துவேஷம் வரலாற்றுக்குப் புறம்பானது; இன்றைய அரசியல் ஞானத்துக்கு முரணானது.

துட்டகைமுனு, எல்லாளன், பரக்கிரமபாகு போன்ற பண்டைய மன்னர்கள் எக்காலத்தவர் என்பதை நாம் நினைத்துப்பார்ப்பதில்லை. இன்றையஉலகம்—இலங்கை உட்பட எல்லாத் துறைகளிலும் நினைக்க முடியாத மாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறது. தேசியம், மொழி வளர்ச்சி, சமயத்தின் பரந்த நோக்கு, மனிதாபிமானம், ஜனநாயகம்,சோஷலிஸசித்தாந்தம், இவையெல்லாவற்றிற்கும் மேலான விஞ்ஞான அறிவியல் – இவை அறவியலுக்கு புதுமெருகு ஊட்டுகின்றதால் நாடு நாம் அதற்கேற்றவாறு வாழ முயல வேண்டும்.

21-ம் நாற்றுண்டை எட்டிப் பார்க்கும் நாம் இன்றும் இந்த நாடு எமக்கே! இங்கு வழங்கும் மொழி ஒன்றே! இங்கு அனுஷ்டிக்கப்படும் மதம் ஒன்றே! என்ற பிடிவாதத்தில் நாட்டின் ஆட்சியை அமைக்க முயன்றுமானுல் அதன் விளைவு எவ்வாறிருக்குமென்பதை இன்று அறியமாட்டாதவர் கண்ணிருந்தும் பார்க்க முடியாதவர்களே!

''தெய்வம் உண்டென்றிரு'' எனும் மகாவாக்கியத்தில் அசையாத நம்பிக்கைகொண்டவர்கள், நல்வினை, தீவினையின் விளைவுகளைத் தர்க்க ரீதியில் உணர முடிந்தவர்கள் இயற்கையின் சீற்றத்துக்கும் மனிதனின் கொடுமைக்கும் தொடர்பு காணுதல் நியாயமானது!

# கண் தானம் செய்வது ஒரு மேலான தர்மம்

மானிட உடம்பிலுள்ள எல்லா உறுப்புக்களுள்ளும், கண் சிறந்தது. அதன் உயர்வு நோக்கி, உடம்பின் உயர்ந்த இடத்திலேயே வைக்கப்பட்டும் இருக்கின்றது. கண்ணின் இயல்பான குணம் கருணை. பிறர்படும் துன்பத்தைக்கண்டு சகியாது கொள்ளும் இரக்கமே கருணை எனப்படும். உடம்பின் பிற உறுப்புக்கள் நோயால், துன்பப்படும்போது கண்கள் இரங்கி நீர் சொரியும் ''மண்டு பிணியால் வருந்தும் பிற உறுப்பைக் கண்டு கலுழுமே கண்'' கண் கருமைநிறமுடையது. கருமை நிறம் படைத்தவை பெரும்பாலும், கருணை இயல்பும்கொண்டவை எமது பேரன்புக்குரியவர்களை நாம் 'கண்ணே' என்றும், 'கருமணியே' என்றும் அழைப்பது வழக்கம்.

மானிடப் பிறப்பின் நோக்கம், ஆன்ம ஈடேற்றத்தைப் பெறுவதென்பது. ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு பெரியார்கள் கண்ட சிறந்த உபாயம், கண்ணினுல் இறைவன் திருக்கோல விழாக்களை காண்பதும், அதிலே ஈடுபடுதலுமாம்.

'மண்ணினிற் பிறந்தார்
பெறும் பயன் மதிசூடும்...
கண்ணினுல் அவர் நல்விழாப்
பொலிவு கண்டார்தல்''

அப்பர் சுவாமிகளும்,

''இனித்தமுடன் எடுத்த
பொற்பாதம் காணப்பெற்ருல்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இப்பாணிலத்தே'' என்றருளினார்.

எனவே, கண்ணுல் அமையும் விழிப்புலன் இம்மைக்கும்மட்டுமல்ல, மறுமைக்கும் பெரும்பயன் தருவது. ஏனைய உறுப்புக்களை இழந்த அங்கவீனர்கள், இம்மைப் பயனை இழப்பர் ஆனுல், விழிப்புலன்இழந்தோர் மறுமைப் பயனையும் இழப்பர். உலகில் வாழும் பலகோடி மக்களுள் சிறுவர் உட்பட ஒரு பகுதியினர், விழிப்புலன் இழந்துப்பேரிருளில் அமிழ்ந்தித் தவிக்கின்றனர் கல்வி கற்கவோ தொழில் செய்யவோ, தன்னில் தான் இயங்கவோ, முடியாதவர்களாய்ப் பிறர் தயவை நாடி நிற்கின்றனர். கருணையின் இருப்பிடமான இரு கண்களைப் பெற்ற நாம், இவர்களுக்குச் செய்யவேண்டியதென்ன?

தானங்கள் பல சொல்லப்படுகின்றன அவற்றுள் கண்தானம் அதிமேலானது. திருக்காளத்தி மலையிலே, குடுமித்தேவரது இரு கண்களும் ஊறுபட்ட போது, திண்ணனூர் என்னும் வேடன், தன்னிரு கண்களையும் இடந்து அப்பிக் கண்ணப்பநாயனுர் ஆனார் இச் செய்தி கண் இழந்தோருக்குக் கண்தானம் செய்வது மேலான தர்மம் என்பதை உணர்த்துகின்றது. உலகில் பல இடங்களில் கண்தானம் செய்யும் தாபனங்கள் அமைக்கப்பட்டு விழிப்புலன் உதவி வருகின்றன. இலங்கையிலும் பல மாவட்டங்களில் கண்தான சங்கங்கள் அமைக்கப்பட்டுச் சிறப்பாக இயங்கிவருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஓர் கண்தான சங்கத்தை 'லயன்ஸ்கழகத்திலர்' நிறுவியுள்ளனர்.

இச்சங்கம் சிறந்த முறையில் தொண்டாற்ற வேண்டுமேயானுல் இதில் நாம் எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கண்தானம்வழங்கும்வகையில் பதிவு செய்து அதன் மூலம் கண்ணில்லா மக்களுக்கு கண தானம் செய்து பிறவிப் பேரிருள் போக்கி நிறைவொளி உதவி இத்தர்ம கைங்கரியத்தை ஊக்குவிப்பதுஎல்லோரினதும் தலையாய கடமையாகும்.

எனவே இக்கண்தான சங்கம் திறமையான முறையில் செயல்படுவதற்கு மக்கள் அனைவரும் எதுவித அச்சமும் பீதியுமின்றி தங்களது பூரண ஆதரவை வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

— டாக்டர் என். சரவணபவன் —

## புனித அந்தோனியார் பெருவிழா

யாழ்ப்பாணத்தின் வடக்கே வடமத்தியில் வளங்கள் மிகுநகராக விளங்குவது சுன்னுகம். கல்வி, செல்வம், ஊக்கம், உழைப்பிற்கு பேர் போனவர்கள் இப்பகுதி மக்கள். இங்கு நிலவும் ஆழ்ந்த தெய்வபக்தியே இதற்குக் காரணம் பழம்பெரும்திருத்தலங்கள் நிறைந்த இப்புராதனப் பகுதியில் திலகமாக புனித அந்தோனியார் ஆலயம் மிளிர்கிறது.

### புனித அந்தோனியார் வரலாறு

1195ம் ஆண்டு ஆவணி 15ம் திகதி மரியன்னை விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திருநாளன்று போர்த்துக்கல் நாட்டின் தலைநகர் லிஸ்பனில் நற்குடிப் பெற்றோர் மாட்டின் மேரியின் தவப்புதல்வனுய் உதித்தார். இவரது இயற்பெயர் பெர்டினன்ட். அழும்போதெல்லாம் அன்னை பாடிய 'மகிமை நிறைந்த ஆண்டவனே' என்னும் தாலாட்டுப் பாடலிலேயே புனிதர் இறை அன்பில் வளரலானுர். கல்வி, கலைகளில் சிறந்தாலும் உலகப்பற்றை நீக்கி புனித அகுஸ்தினுர் துறவற சபையில் சேர்ந்தார், வேத சாஸ்திரங்களை தெளிவுறக் கற்று 1219ம் ஆண்டு இருபத்தி நான்காம் வயதில் குருவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். மொறக்கா நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஐந்து வேதசாட்சிகளின் திருப்பண்டங்களை ஆராதிக்கும் வேளை தானும் அதே விதமாக கிறிஸ்துவுக்காக மரிக்க ஆசித்தார். 1?21ம் ஆண்டு புனித வனத்து அந்தோனியார் பெயரிலிருந்த புனித பிருன்சிஸ்க்கு சபையில் சேர்த்து தன்பெயரையும் அந்தோனியாராக மாற்றினுர். இப்பெயராலேயே இவர் எங்கணும் புகழ்பெறுகிறார்.

### புனிதரின் புதுமைகள்

எண்ணிலடங்காதவை. மீன்களுக்குப் போதித்தது. நற்கருணையின் மகத்துவத்தை எண்பிக்க மூன்றுதினங்கள் பட்டினி கிடந்த கழுதையை தாழ்பணியச் செய்தது. தன் மொழியில் பேசக்கேட்போர் தத்தம் மொழிகளில் புரிய வைத்தது. நொண்டிக் குழந்

கபிரியேல் எட்வேட்

தைக்கு சிலுவை அடையாளமிட்டுக் குணமாக்கியது. தன் தந்தை பொய்க்கொலைக் குற்றஞ்சாட்டப்பட்ட வேளை அற்புதமாகத் தோன்றி இறந்தவனை உயிர்ப்பித்து தந்தையைக் காப்பாற்றியது. கொதி எண்ணெய் அண்டாவில் விழுந்த குழந்தையை அதிலே விளையாடுமாற்போல் செய்தது. காணுமல் போன பொருட்களை கண்டடையச் செய்தது. அனைத்திற்கும் மேலாக யேசு ஆண்டவரை குழந்தை ரூபத்தில் தன்கரத்தில் ஏந்த வரம்பெற்றது.

### இறப்பும் அழியா நாக்கும்

1231-ம் ஆண்டின் தவக்காலத்தில் கடும் விரதமிருந்து நற்போதகம் புரிந்து ஓர் குடிசையில் ஏழ்மையில் சீவிக்கும் வேளை தன் அந்திம காலத்தை உணர்ந்தார். ஆனி 13ல் நற்கிருத்தியங்கள் பெற்று 'யேசுவும் மரியாளும் என்னை விண

(5-ம் பக்கம் பார்க்க)

## காரைநகர் வீரகத்திவிநாயகர் மாக கும்பாபிஷேகம்

காரைநகர் வடக்கு அருள்மிகு வீரகத்தி விநாயகர் அல்லது மருதடியிற் பிள்ளையார் திருக்கோயில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

இத்திருக்கோயில் காரைநகர் களபூமியைச் சேர்ந்த வேளான் மரபினர் இராமநாதர் சுப்பிரமணியம் என்பவரால் கி. பி. 1750-ம் ஆண்டு நிறுவப்பட்டது. அத்திருக்கோவில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு விநாயகர் பெருமானை அருள்மிகு வீரகத்தி விநாயகர் என்று அழைத்தனர்! தலவிருட்சமாகாமருது ஒன்று இருப்பதனுல் அத்திருக்கோவில் அருள்மிகு ''மருதடியிற் பிள்ளையார் திருக்கோயில்'' என்று பொதுமக்களால் அழைக்கப்பட்டது

இராமநாதர் சுப்பிரமணியம் இத்திருக்கோவிலைப் பரிபாலனஞ்செய்து வந்தபின் அவரின் மகன் சுப்பிரமணியம் முருகர் என்பவர் இத்திருக்கோயிற் பரிபாலனஞ் செய்து வந்ததுமன்றி அருள்மிகு விநாயகப் பெருமானுக்குரியதிருப் பூசைகளையும் தாமே செய்துவந்தனர்.

இத்திருக்கோயில் 1892-ம் ஆண்டில் அரசினரால் பதியப்பட்ட திருக்கோவிற் பட்டியலில் பதியப்பட்டுள்ளது. இப்பதிவு செய்யுங்காலத்தில் சுப்பிரமணியம் முருகரின் சகோதரி மகனுன இராமநாதர் காசிநாதர் மனேச்சராக இருந்து வந்தார்.

இத்திருக்கோவிலுக்கு கி. பி 1888ல் காரைநகர் வடக்கு வலந்தலையைச் சேர்ந்த முருகேசு அருணுசலம் அவரின் புத்திரர் விஸ்வநாதர், பரமு, கந்தப்பர் ஆகிய மூவரும்

[5-ம் பக்கம் பார்க்க]

## யாழ். மேல்நீதிமன்ற நீதிபதியாக திரு ஜே. ஜி. ஆசீர்வாதம்

### வவுனியாவில் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்றிருக்கும் திரு. ஜே ஜி. ஆசீர்வாதத்திற்கு சிரேஷ்ட சட்டத்தரணிகளால் வவுனியா மேல்நீதிமன்றத்தில் வைத்து வரவேற்பளிக்கப்பட்டது.

இவ்வரவேற்பில் உரையாற்றிய சாவகச்சேரி எம் பி. யும் சட்டத்தரணியுமான திரு. வி. என். நவரத்தினம் அனுபவமும் திறமையும்மிக்க நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் இப்பதவி உயர்வு பெற்றது யாவருக்கும் மகிழ்ச்சி தருவதாயுள்ளது என்று கூறி அவரது சேவையைப் பாராட்டினுர்.

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஜே ஜி. ஆசீர்வாதம் வவனியா சுற்று மேல்நீதிமன்றத்தில் அப்பகுதியின் மேல்நீதிமன்ற வழக்குகளையும் அநுராதபுரத்தில் எடுக்கப்படும் மேல்நீதிமன்ற தமிழ் வழக்குகளையும் விசாரணை செய்வார்

சட்டத்தரணி கனக. மனோகரனும் இவ்வைபவத்தில் உரையாற்றினுர். [கி]

## தெட்சணு மருதமடு கொலைவழக்கு: ஒரு குற்றச்சாட்டை அரச சட்டத்தரணி வாபஸ்பெற்ருர்

(வவனியா)

தெட்சணுமருதமடு இனக்கலவரக்கொலைவழக்கு வவனியா சுற்றுமேல்நீதிமன்றத்தில், நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 77 ஜூலை 23ம் தேதி வண்டலின் பெரேரா என்றபெண்ணையும், பெற்றஸ் பெரேரா என்பவரையும் கொலைசெய்ததாகவும், சுதர்சன் போல் பெரேராவை கொலைசெய்ய முயற்சித்ததாகவும், சட்டவிரோதமாக கூட்டம் கூடி, இவர்கள் வீட்டிற்கு தீயிட்டதாகவும், தெட்சணு மருதமடுவைச் சேர்ந்த அ. சுப்பிரமணியம், தி சிவசுப்பிரமணியம், கு. ஆனந்தன், த. திசைவீரசிங்கம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கடந்த தவணையின்போது ஒருகுற்றச்சாட்டை நீக்குமாறு எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனகமனோகரன் வாதிட்டார்.

அரச சட்டத்தரணி எஸ். ஸ்ரீஸ்கந்தராசா. எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் ஒன்றை வாபஸ்பெறுவதாக தெரிவித்தார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கனகமனோகரன், சட்டத்தரணி கே. எஸ். பாலகிருஷ்ணன் உதவியுடன் ஆஜராஞர். நீதிபதி விசாரணையை ஆகஸ்ட் 5-ம் தேதிக்கு ஒத்திவைத்தார். (க)

## இன்று மணற்காட்டில் நாட்டுக்கூத்து

[புலோலி]

மணற்காடு அந்தோனியார் கோவில் வருடாந்த் நவநாட் திருவிழா இன்று சனிக்கிழமை காலை நடைபெற்று கூட்டுத் திருப்பலிப்பூசை ஆராதனையுடன் நிறைவுபெறும். இரவு ''ஊசோனபாலந்தை'' நாட்டுக்கூத்தும் இடம்பெறும். [அ]

## அதிபர் இல்லை!

(மண்டைதீவு)

மண்டைதீவு கார்த்திகேசு கனிஷ்ட வித்தியாலயம்கடந்த இருவாரங்களாக அதிபர் இல்லாது இயங்கிக்கொண்டிருக்கிறது. வித்தியாலய அதிபர் சேவை நீடிப்புப்பெற்று, புங்குடுதீவுக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவரது இடத்துக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

## வேலை நாள் குறைப்பு: ஊழியர்கள் பாதிப்பு!

(மண்டைதீவு)

வேலணை பெரும் தெருக்கள் திணைக்களத்தைச்சேர்ந்த தற்காலிக கங்காணிமார்களுக்கு மாதத்தில் பத்து நாட்கள் மட்டுமே வேலைவழங்க முடியுமென்று வேலணை பெருந்தெருக்கள் திணைக்கள நிறைவேற்றுப்பொறியியலாளர் திரு. க. பத்மநாதன் அறிவித்தது தொழிலாளர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஐந்துவருடங்களுக்கு மேலாக மேற்படி திணைக்களத்தில் வேலைபார்த்துவந்த ஊழியர்களுக்கு இந்த அறிவித்தல் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் கொடுத்துள்ளது.

வாழ்க்கைச் செலவு பன்மடங்காக அதிகரித்த இக்காலத்தில், வேலைநாள் குறைப்பால் ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சம்பந்தப்பட்ட ஊழியர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தைச்சந்தித்து பாதிக்கப்பட்ட கங்காணிமார்கள் சார்பில் மகஜர் ஒன்று தொழிற்சங்கப்பிரதிநிதி திரு. க. கந்தசாமி மூலம் கையளிக்கப்படவிருக்கிறது.

## இன்று பாராட்டுவிழா

[புலோலி]

வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானப் பிரதமகுரு சிவஸ்ரீ செ தண்டபாணிகதேசிகர் அரசினுல் சமாதானநீதவாஞக நியமிக்கப்பட்டதைப் பாராட்டியும் கௌரவித்தும் இன்று சனிக்கிழமை மாலை தேவஸ்தான முன்றலில் கூட்டம் நடைபெறவுள்ளது. நெடியகாடு பிள்ளையார் கோவிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி கூட்ட முன்றலை அடையும். பலர் பாராட்டுரை வழங்குவர். [அ]

## காரைநகர்....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

சேர்ந்து ஒரு வயலையும், ஒரு தோட்டக்காணியையும் 'தர்ம சாதனஞ்செய்தனர். அதுமட்டுமட்டுமன்றி அவர்கள் 1912ல் இத்திருக்கோவிலைத் திருத்தி அமைத்து மகாகும்பாபிஷேகமும் செய்வித்தார். பின் குமாரர், சங்கரப்பிள்ளை என்பவர்கள் ஆண்டுதோறும் 25 புசல் நெல் கொடுத்துவந்தனர். அவர் மகன் ஏரத்தினம் [தர்ம கர்த்தாசபை உறுப்பினர்] தொடர்ந்தும் 25 புசல் நெல் ஆண்டு தோறும் திருக்கோயிற் பூசைக்குக் கொடுத்துவர்தார். 1954 ஆண்டிலும் வழிபடுவோர் சங்கம் ஒன்று செயல்படத் தொடங்கியது. பின் 1972-ம் ஆண்டில் நடந்த வழிபடுவோர் சங்கத்திஞல் தெரிந்து எடுக்கப்பட்டோர் இத்திருக்கோவிலைப் பரிபாலித்து வருகின்றனர்.

இத்திருக்கோயிற் புனருத்தாரண வேலைகளில் தர்மகர்த்தாசபையின் செயலாளராகிய முன்னைநாள் கிராமச் சங்கத்தலைவர் அ. மு. அம்பலவாணரும், பொருளாளர் ஆகிய பிரபல வர்த்தகர் வி. மு. சண்முகம் (வி. எம். எஸ்) அவர்களும் விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள், திரு. அம்பலவாணர் அவர்கள். நிருவாகத்தைச் செவ்வனே திறமையுடன் நடத்தி, திருகோயிற் திருப்பணியை நிறைவேற்றியுள்ளார்கள். எல்லாவற்றிற்கும் வேண்டிய பொருளை வாரிவழங்கித் திருக்கோயிலைக் கட்டி முடித்த பெருமை வி. மு. சண்முகம் அவர்களையே சாரும். வழிபடுவோர்வழங்கிய பொருளுதவியுடன் எந்த நேரத்திலும் தேவைப்படும் போது சலிக்காது பணத்தையும், பொருட்களையும் கொடுத்துத் திருப்பணி நன்கு நிறைவேறச் செய்தவர் அவர்களே. அவர்களுக்கு அருள் மிகு விநாயகர் அடியார்கள் என்றும் கடமைப்பட்டுள்ளார்கள்.

மகாகும்பாபிஷேக பிரதிஸ்ட பிரதமகுருவாக நயினை பிரதிஸ்டாபூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாதபரமேஸ்வரக் குருக்கள் கடமையேற்று இன்னும் பல பிரபல்யம்வாய்ந்த குருமார்களுடன் கிரியைகளை நடத்திவருகின்றுர்கள்.

த. சோமசுந்தரம்


**Course Title**

C. E. I. (London)
Electrical and Electronic Engineering
CITY and GUILDS (London)
Power - Electronics - Telecommunication
DRAUGHTMAN SHIP
ELECTRO TECHNICIAN
(Theory and Practical Training)
4 Months Course.
Commencing: 19-6-1982

**BOND INSTITUTES**

Hospital Road, Jaffna. Phone: 8258



**T. V. ஏரியல் அமைப்பில்**

**முதன்மைமிக்க ஸ்தாபனம்**

சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை
T V யில் சிரமமின்றி பார்க்க
உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.
நொடிப்பொழுதில், TV ஏரியல்
கோளாறுகளை சரி செய்யலாம்.
எமது பராமரிப்பு சேவை
24 மணி நேரம் செயல்படுகின்றது
சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்
எடுப்பதற்கு
குறைந்த கட்டணம்
பல்வேறு TV செட்டுகளை
பிஞன்ஸ் வசதியுடன் பெறலாம்.

**வீனஸ் றெக்கோடிங்**

**றேடியோ வாச் வேக்ஸ்**

ஸ்ரீதர் தியேட்டர் முன்,
யாழ்ப்பாணம்.


## புனித...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

ணகம் அழைக்கின்றனர்' என்னும் உச்சாரணம் நாவில் தவழ தன் அன்னையின் தாலாட்டுப் பாடலைப்பாடி 36வது வயதில் இறைபதம் அடைந்தார். 1132ம் ஆண்டிலேயே திருச்சபை அவரைப் புனிதராகப் பிரகடனப்படுத்தியது. பதுவை நகரில் பணி புரிந்து மரித்து அடக்கம் செய்யப்பட்டபடியிஞல் அவர் பதுவைப்பதியரான புனித அந்தோனியாரெனப் புகழ் பெறுகின்ருர்.

### அந்தோனியார் பதி வரலாறு

250 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் பல எதிர்ப்புகளை எதிர்நோக்கியது. ஒருமுறை ஓலைக் கொட்டிலாக இருந்த வேளை எரித்துச் சாம்பலாக்கப்பட்டாலும் புனிதரின் சந்தன மரத்திலான புராதன சுருபமும் அவர் வீற்றிருந்த மரத்தாலான அழகிய கூடும் தீக்கிரையாகவில்லை. இன்றும் தீயின் வடுக்களைக் கூட்டில் காணலாம், அழியா நாக்கின் பகுதியும் இங்கு பூச்சிதமாக வைக்கப்பட்டிருக்கிறது மரத்தில் செதுக்கப்பட்ட அழகிய சிம்மாசனத்தில் குடிகொண்டிருக்கும் புனிதரின் இன்னெரு பாரிய பெரும் சுருபம் ஆலய நடுவில் அமைந்து கண்கொள்ளாக் காட்சியாக இலங்குகிறது. இச் சுருபத்தின் அமைப்பு தன் இடக்கரத்தில் பாலனுடனும் வலக்கரத்தில் அப்பத்தைக் கொண்டிருப்பது இதன் சிறப்பாகும். அண்டி வந்தோருக்கு ஆதரவளிக்கும் தரும அப்ப அந்தோனியாரின் பக்தர் தொகை இவ்வாலயத்தில் கூடிக்கொண்டே வருகிறது.

### வழிபாடு-தேவைகள்

செவ்வாய் தோறும் மாலை 4-30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி புனிதரின் நவநாட்பக்தி நிறைவேற்றப்பட்டு திருப்பலியுடன் வழிபாடு நடந்தேறுகிறது. பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப ஆலய இடவசதி போதாமலே உள்ளது. ஆலயத்திற்கு பெருக்கூட்டவும் இடவசதியைப் பெருக்கவும் ஓர் போட்டிக் கோவை அமைப்பது பக்தர்களின் பேரவா.

### கொடிதினம்

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாலய மக்கள் திருநாட்காலங்களில் கொடிதினத்தை நடாத்தி திருப்பணி வேலைகளுக்கு ஒத்தாசை புரிந்துள்ளார்கள்,

சென்ற ஆண்டு தொடக்கம் புனிதர் விண்ணகம் சென்ற 750வது ஆண்டின் நிறைவு விழா உலகெங்கும் கோலாகலமாக கொண்டாடப்படுகின்றது, இப்பதியும் இதற்கு விதிவிலக்கல்ல திருநாளன்று 13ந் திகதி நாளைக்காலை ஆலய முன்வீதி ஓரத்தில் ஞாபகச் சின்னம் ஒன்று இதையொட்டி நிலைநிறுத்தப்படுகிறது. புனிதரின் பாரிய தரும அப்ப அந்தோனியார் சுருபம் அழகுற அமைக்கப்பட்ட சிம்மாசனப் பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. இப் புண்ணிய கைங்கரியத்தை இப்பங்கின் மகன் புனிதரின் பக்தன் வைத்தியக்கலாநிதி ஜி. ஜோர்ஜ்[ச. நி] குடும்பத்தினர் அன்பின் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றனர்.

## இறந்தும் இறவாத சித்த வைத்தியர்

மருந்து கால் மதி முக்கால் என்ற முது மொழிக்கேற்ப தனது வைத்தியத் தொழிலைச் செய்தவர் வைத்தியரத்தினம் கனகரெத்தினம். ''வைத்தியம் வாழ்க்கைக்குப் பொருள் தேடவல்ல, மக்களுக்குச் சேவை செய்யவே'' என்ற நோக்கம் கொண்டவர். இளமையில் கொழும்புத்துறைச் சுவாமி யோகரைச் சந்திக்கச் சென்றபோது சுவாமியவர்கள் ''எடே கனகரத்தினம் ஏன் இங்கு நிற்கின்ருய் உனக்கு வைத்தியம் கைகூடும். கந்தனைக்குருவாகக் கொண்டுவைத்தியத்தைப்படி. ஆஞல் கந்தனை...—

இதற்குமேல் கனகரத்தினம் பேசவில்லை. அங்கிருந்து நகர்ந்தார்.

சின்னக்கடையில் வசித்த பெரும் புகழ் படைத்த வைத்தியர் கந்தரை நாடிச் சென்ருர்.

அங்கே சுவாமியவர்களும் இருந்தார்.

''அன்று முதல் நான் கந்தரின் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சீடஞகினேன்'' என்ற உண்மையை கனகரத்தினம் தன் மாணவர்களுக்கு அடிக்கடி எடுத்துக் கூறுவார்.

வைத்தியத்தை கந்தரிடம் பயபக்தியுடன் கற்ருர். எவ்வித பேதமுமின்றி குருவின் கீழ் இருந்து சிலவருட காலம் தொழில் செய்தார். பின் தனியாகத் தொழில்செய்ய தலைப்பட்டார். குருவின் உபதேசம் கைகண்ட பலனைக் கொடுத்தது. வைத்தியத்தால் பேரும் புகழும் சேர்ந்தது ஆஞல் அவர் உள்ளம் பொருளைத் தேடிக்கொள்வதில் நாட்டம் கொள்ளவில்லை.

ஈச்சமோட்டையில் வாழ்ந்து தன் கிராமத்தில் மட்டுமன்றி பரந்தளவில் யாழ்ப்பாணம் எங்கும் தன்சேவையை திறம்படச் செய்தமைக்காக அன்னரின் சேவையைப் பாராட்டி வட இலங்கை சித்த வைத்திய

(8-ம் பக்கம் பார்க்க)

# "தமிழ் இனத்துக்குள் பிரிவினை, கருத்துமோதல்கள் துரதிர்ஷ்டவசமானது"

## தமிழ் ஈழப்போராளிகள் அஞ்சலிக்கூட்டத்தில் 'தருமர்'

[யாழ்ப்பாணம்]

'எமது இனத்தின் விடுதலைப்பாதையில் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு முன்பாகவே எமது அணிக்குள் பிரிவினைகளும் கருத்துமோதல்களும் ஒரு தடையாக ஏற்பட்டுவிட்டதே இது துரதிர்ஷ்டமானது. என்று மானிப்பாய் எம். பி திரு. வி. தர்மலிங்கம் தமிழீழ விடுதலைப் போராளிகளின் அஞ்சலிக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கவலை தெரிவித்தார்

அளவெட்டியைச் சேரந்த இறைகுமாரன், உமைகுமாரன் அஞ்சலிக்கூட்டம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் திரு. வை. சந்திரபாலன் தலைமையில் நடைபெற்றது.

### கண்ணீருடன் 'தர்மர்' உரை

இந்த அஞ்சலிக்கூட்டத்தில் திரு. தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில், ''அரசியலைப் பொறுத்தவரையில் எம்மிடையே கருத்துவித்தியாசம் இருப்பதுபற்றி எனக்குத் தெரியாது. இறைகுமாரனுக்கு அஞ்சலி செலுத்தும் அடிப்படையில்தான் இங்குவந்தேன். இறைகுமாரனுடன் நீண்டகாலம் நெருங்கிப் பழகியிருக்கிறேன். ஆதலால் உரிமையோடுதான் இங்கு அஞ்சலிசெலுத்தி உரையாற்ற முன்வந்தேன். என்று கண்ணீர்மல்க கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''சமீபகாலமாகபத்திரிகைகளில் எனக்கும் கூட்டணிக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாகவும் இதனல் தேர்தலில் நிற்கமாட்டேன் என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன. நான் தேர்தலில் நிற்பேனே இல்லையோ, அது வேறு விடயம். கூட்டணிக்கும் எனக்கும் எந்தவிதமான கருத்து வித்தியாசமும் இல்லை என்று உறுதியாகக் கூறுகிறேன்.

''தமிழர்களின் எல்லையைக் காப்பாற்ற பதவியாவில் தனக்கு காணிபெற்றுத் தருமாறு இறைகுமாரன் வற்புறுத்தினர். அவரது கரைச்சல் தாங்க முடியாமல் பதவியாவில் காணி பெற்றுக் கொடுத்தேன். அங்கே மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு திரும்பவும்என்னை வந்து சந்தித்தார். தமிழினத்தின் விடுதலை பற்றியே எந்நேரமும் என்னுடன் பேசுவார். தமிழினத்தின் எல்லையைக்காப்பாற்ற பதவியாவுக்குச்சென்ற இறைகுமாரன்போல் எத்தனை இளைஞர்கள்சிந்திப்பார்களோ?

### வடக்குக் கிழக்கு ஒற்றுமை....

வடக்குக் கிழக்குமக்களின்ஒற்றுமையைப்பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் அடிக்கடி சொல்லுவார். மட்டக்களப்பு புயலால் தாக்கப்பட்டிருந்த போது அரிய பலசேவைகள் செய்தார். ஒரு இலட்சிய புருஷனுக்குத் தான் இப்படியான சிந்தனைகள் தோன்றும்.

தமிழ் இளைஞர் பேரவைக்கும் இறைகுமாரனுக்கும் ஏற்பட்ட கருத்து வித்தியாசத்தால் கூட்டணிக்கு மாறிபின்பு பிரிந்துஇளைஞர் விடுதலைஅணியை அமைத்தார்.

ஒரு விடுதலை இயக்கத்துக்கு பத்திரிகை அவசியம் என்பதை உணர்ந்து''இளைஞன் குரல்'' என்ற பத்திரிகையை வெளியிட்டார்.

தமிழினம் என்று சுதந்திரம் அடையுமோ அன்றுதான் இறைகுமாரன் ஆத்மாவும் சாந்தியடையும்.

உமைகுமாரனைப்பற்றி எனக்கு நன்கு தெரியாவிட்டாலும் அவரும் தமிழினத்தின் விடுதலைக்குப் பாடுபட்டவர் என்பது பலருக்குத் தெரியும்.

அஞ்சலிக்கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு இரு நிமிட மௌனஞ்சலி செலுத்தப்பட்டு விடுதலைக் கீதமும் இசைக்கப்பட்டது. [மா]

# "அரசு - கூட்டணி இணக்கம்: அமெரிக்கா பின்னணி"

[யாழ்ப்பாணம்]

''அரசுக்கும் கூட்டணிக்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்துவதில் அமெரிக்காவே பின்னின்று இயங்கியது. இதனைத் தீர்க்கதரிசனத்துடன் முன்கூட்டியே 'இளைஞர் குரல்' ஏட்டின்மூலம் வெளியிட்டவர் இறைகுமாரன். திருமலையை அரசு அமெரிக்காவுக்குத் தாரை வார்த்துவிடுமெனப் பட்டி தொட்டியெங்கும் சென்றுகருத்தரங்குகள் நடத்தி மக்கள் சக்தியைத் திரட்டமுன்னின்று உழைத்த இறைகுமாரனின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது''

இவ்வாறு கோவை மகேசன் நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் ஈழப் போராளிகளின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

அரசினல் நியமிக்க பட்ட மாவட்டசபை தொடர்பான ஆணைக் குழுவில் கூட்டணி சார்பில் நியமிக்கப்பட்ட திரு நீலன் திருச்செல்வம் கூட்டணியின் பொதுச்சபையினுல் நியமிக்கப்படவில்லை எனவும் கோவைமகேசன் தமதுரையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

''சின்னஞ்சிறுநாடுகள்பாரில் சுதந்திர நாடுகளாகத் திகழ்வது பற்றிப் புள்ளி விபரங்களுடன் புத்தகம் வெளியிட்டவர் இறைகுமாரன். இடதுசாரிக் கட்சிகளுடன் நெருங்கிய உறவுடைய தமிழ்ஈழத்தில் பொதுவுடமை அரசொன்று உருவாகுவதையே விரும்பினர்.

''ஆயுதம் தூக்கிப் போராடுவது மட்டும்தான் விடுதலைப் போராட்டம் என்று கருத முடியாது. விடுதலை வேகத்தை நெஞ்சில் நிறுத்தி உண்மையான விடுதலைத் தாகத்துடனும், உணர்வுடனும் நிதானமாகவும் புனிதமாகவும் போராடுவதுதான் உண்மையான இலட்சிய வீரர்களுக்கு உரிய போர்ராட்டப் பண்பு. இலட்சிய வீரர்கள் இப்படியே நடந்து கொள்வர். இந்தவிதமான இலட்சிய விடுதலைப் பாதையிலேயே இறைகுமாரனும் செயல்பட்டார்.''

''பலவித நீதியான உரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவும் உதவியும் நல்கிவந்த இறைகுமாரன் இறுதியாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தித் உண்ணுவிரதப் போராட்டத்திலும் தமது பங்கைச் செய்துவிட்டு, வீடு சென்றவர் மறுநாள் பிணமாகக் கிடந்தார்'' [வண்-அ]


உங்கள் வீட்டிற்குத் தேவையான பாவனைப்பொருட்களை

**தவணைமுறையில்**

சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

- தொலைக்காட்சி (T. V.) பெட்டிகள்
- மின் விசிறிகள்
- நீர் இறைக்கும் இயந்திரங்கள்
- துவிச்சக்கர வண்டிகள்

மற்றும் உங்களுக்குத் தேவையான பொருட்கள்!

**மங்கள வைபவங்கள் வீடியோ** படப்பிடிப்புச் செய்துகொடுக்கப்படும்

தொடர்புகொள்ளவும்:

முகாமையாளர்

**த பிறின்ஸ் கம்பனி லிமிட்டெட்,**

TFC

249, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: 7680


# இன்றைய பலன்

வைகாசி மாதம் 29ம் திகதி

சனிக்கிழமை

(12—6—82)

மேடம்: மனையில் பூசல்கள் தோன்றி மறையும், தனிமையை விரும்புவீர்கள் தொழில் புரியும் இடத்தில் கண்துடைப்பு வேலை நடைபெறும்.

இடபம்: உழைப்பினல் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்தி உண்டு. தாய்வழிப் பொருள் வரவிற்கும் இடமுண்டு. உற்சாகமான தினம்.

மிதுனம்: பொருள் வரவு திருப்திகரமாக இருக்கும். புத்திரர் வழியால் புகழும் கிடைக்கும். புதிய உடன்படிக்கை ஒன்றுக்கு இடமுண்டு.

கடகம்: தூரதேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்துக்கு இடம் ஏற்படலாம் ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம்வேண்டும்.

சிங்கம்: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கலாம் இல்லம் பல்கலைக்கழகமாக மாறும் களஸ்திரவழியால் கண்ணியம் சேரும்.

கன்னி: ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும் செல்வாக்குப் பாதிக்கப்படலாம் அயலவர்களுடன் அன்புடன் நடந்துகொள்ளவும்.

துலாம்: முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும் முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும் குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும்.

விருச்சிகம்: உற்சாகமான தினம் உறவினர்கள் பச்சைக் கொடி காட்டுவார்கள் புதிய தொழில்களில் மனதைச் செலுத்துவீர்கள் நல்ல தினமாகும்.

தனு: கட்டி வெல்லம்போல் இனிக்கும் வாழ்க்கை இனபந்துகளின் ஆதரவும் கிடைக்கும் எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும்.

மகரம்: மனதில் விரக்தி நிலை தென்படும் உடல்நலமும் பாதிக்கப்படலாம் கால்நடைகளினல் நஷ்டம் ஏற்படும் துக்க தினமாகும்.

கும்பம்: எதிலும் தயக்க நிலை தென்படும் நண்பர்களும் குறை கூறுவர் மந்தநிலை தென்படுகின்றது. வாய்வு ரோகங்களுக்கு இடம்கொடாது இருக்கவும்.

மீனம்: பேச்சு வன்மையினல் பெரும் புகழ் கிடைக்கும் பெரிய இடத்துச் சினேகிதம் உங்களுக்குச் செல்வாக்கைத் தரும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# வடிசாராயம் விற்பது கடுமையானகுற்றம்

## நீதிவான் எச்சரிக்கை

[மாவிட்டபுரம்]

''வடிசாரயம் வைத்திருந்த, அல்லது விற்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவோர் மீது நீதிமன்றம் கடுமையான நடவடிக்கை எடுக்கும். இக்குற்றத்திற்கு சிறைத்தண்டனை விதிக்கவும் தயங்கமாட்டேன்.''

வடிசாராயம் வைத்திருந்ததாக கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட 5 பேர்களை நோக்கி நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் இப்படி எச்சரித்தார்.

சுன்னுகம் பொலிஸ் பகுதியில் சட்டவிரோதமாக வடிசாராயம். வைத்திருந்ததாக சுன்னுகம் பொலிசாரால் இந்த ஐவரும் கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு முன்குற்றம் ஏதும் உண்டா? என வினவிய நீதிபதி பொலிசார் இல்லையெனக் கூறவே தலா 2(0 ரூபா அபராதம் விதித்தார்.

வடிசாராயம் வைத்திருப்பதோ, விற்பதோ கடுமையான குற்றமாகும். இது பல தீமைகளை ஏற்படுத்துகிறது. முதல் குற்றமாக இருப்பதால் அபராதம் விதிக்கிறேன். இனிமேல் இவ்வாறான குற்றம் சுமத்தப்பட்டால் சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் நீதிபதிஎச்சரித்தார்.(க)

# மாலைதீவு கப்பலில் விபத்து

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற மாலைதீவு எக்ஸ்பிரஸ்'எனும் சரக்குக்கப்பலில் பழுது பார்ப்பதற்கென வைக்கப்பட்டிருந்த வாயுக் கொள்கலன்கள் வெடித்ததனல் ஒரு பிரதம பொறியியலாளர் உட்பட நான்கு திருத்துநர்கள் காயமடைந்தனர்.

திருத்த வேலைக்காககொழும்புத் துறைமுகத்தில் இக்கப்பல் நங்கூரமிட்டிருந்தது.

காயமடைந்த மூன்று திருத்துநர்களும் இலங்கையைச் சேர்ந்தவர்களாவர். பிரதம பொறியியலாளர் பிலிப்பைன்ஸ் நாட்டவராவர். (கி)

# குடிநீர்க் கஷ்டம்

(கரவெட்டி)

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் மாணவர்கள் குடிநீர் பெறுவதில் பெருங்கஷ்டமும், அவதியும் அடைந்து வருவதாக கரவெட்டிக் கல்வி வட்டம், வடமாநிலக் கல்விப் பணிப்பாளரிடம் புகார் செய்துள்ளது. இது சம்பந்தமாக கல்வி வட்டச் செயலாளர் திரு க. தேவதாஸ், வடமாநிலக் கல்விப்பணிப்பாளருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

பிரஸ்தாப மகஜரில்: ''இக் கல்லூரியில் தண்ணீர்த்தாங்கி ஒன்று நிறுவப்பட்டு இருந்த போதிலும் உரிய முறையில் குடிநீர் வழங்கப்படாததினல் மாணவர்கள் குடிநீர் பெறுவதற்காக வீதிகளில் அலைந்துதிரிவதைக் காணக்கூடியதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொங்கல்

# வேள்வி விழா பின் போடப்பட்டது

[மாவிட்டபுரம்]

கீரிமலை கவுணுவத்தை வைரவர் கோவில் வருடாந்த பொங்கல் வேள்வி விழா பிற்போடப்பட்டுள்ளதாக ஆலய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி ஆலய உயிர்ப்பலிக்கு அனுமதி கோரியும், அதனைப் பொலிசார் தடை செய்யக் கூடாதென உத்தரவிடுமாறு கோரியும் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மனுவின் விசாரணை முடிவுருமையினுலேயே இப் பொங்கல் - வேள்வி விழா பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மனு விசாரணை முடிவடைந்து தீர்ப்பு வழங்கப்பட்டதும் இவ்விழா நடைபெறும்.

வெஸ்லி மானிப்பாய்
17-6-82 வரை
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-ஜெய்சித்ரா
வண்டிக்காரன் மகன்
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - பாரதி
உனக்கும் - எனக்கும்
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
Force 10 From Navarone

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
13-6-82 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
தினசரி 5 காட்சிகள்
நீகல் (யாழ்நகர்)
KIRK DOUGLAS—RICHARD HARRIS in
The Heroes of Telemark
War Film—Color
18-6-82 முதல் ஸ்ரீதரின்: (Color)
மோகனப் புன்னகை

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
BEN - HUR
From 14-6-82
THE OTHER SIDE OF MIDNIGHT

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு - சுஜாதா - சரிதா
கே. பாலசந்தரின்
நூல்வேலி (கலர்)

From: 14-6-82 BRUCE LEE in
THE GAME OF DEATH

மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
5-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
கார்த்திக் ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்]

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
தொடர்ந்து ''ஹவுஸ்புல்'' காட்சிகளாக
ரஜனிகாந் சுஜாதா விஜயன்
கராத்தே மணி ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
4-வது வெற்றி வாரம்
கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா,
சுவப்ஞு, தேங்காய்,
தங்கவேலு, நாகேஷ்.

கடல் மீன்கள்
—கலர்—

### யுவதியை இருவாரங்கள்

# தம்முடன் அனுப்புமாறு தந்தை விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

(மாவிட்டபுரம்)

பலாத்காரமாசத் தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்ட யுவதியை சர்ப்பிணியா என அறிவதற்கு யாழ் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்துமாறு உத்தரவிட்ட மல்லாகம் நீதிபதி இவ்விவகாரத்தை இம்மாதம் 22ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த கே. சின்னையா என்பவர் ரியூசனுக்குச் சென்ற தமது மகளை உடுவிலைச் சேர்ந்த ஏ. ரவிக்குமார், சுன்னுகத்தைச்சேர்ந்த ந. கிருஷ்ணராஜா ஆகியோர் கடத்திச் சென்று பலாத்காரமாக தடுத்து வைத்துள்ளதாகவும், அவரை மீட்டுத்தருமாறும் அப்பீல் நீதிமன்றத்தில் விண்ணப்பித்ததையடுத்து இதில் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து விசாரணை செய்து யுவதியை யாரிடம் விடுவது என்பதைத் தீர்மானிக்குமாறு அப்பீல் நீதிமன்றம் மல்லாகம் நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டிருந்தது

இதற்கமைய யுவதியும், அவரைக் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டவர்களும், யுவதியின் தந்தையும், மல்லாகம் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு கடந்ததவணை விசாரிக்கப்பட்டனர்.

யுவதி, தாம் தமது காதலரான ரவிக்குமாருடனேயே செல்ல விரும்புவதாகக் கூறியதுடன் தான் 2 மாதக் கர்ப்பிணி என்பதையும் நீதிபதியிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து இது உண்மையா? என அறிவதற்கு யாழ் பல்கலைக் கழக வைத்திய பேராசிரியரிடம் பரிசோதனைக்குட்படுத்தவேண்டுமென தந்தையின் சார்பில் கோரப்பட்டதால் நீதிபதி அதற்கு உத்தரவிட்டிருந்தார்.

இவ்விவகாரம் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் யாழ். பல்கலைக் கழக வைத்திய பேராசிரியர் திரு. சிவசூரியா மேற்படி யுவதியை தம்மால் பரிசோதிக்க முடியாதெனவும், யாழ். சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைக்குட்படுத்துமாறும் கூறி நீதிமன்றத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி யுவதியின் தந்தையிடம் விசாரித்தபோது அவ்வாறு சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்துமாறு கூறினர்.

இதனையடுத்து நீதிபதி யாழ் சட்ட வைத்திய அதிகாரிதிரு. எஸ். சுப்பிரமணியத்தை இந்த யுவதியைப் பரிசோதித்து கர்ப்பிணியா என அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

மேற்படி யுவதியை இருவாரங்களுக்குத் தந்தையின் பொறுப்பில் விடவேண்டுமென சட்டத்தரணி எம். கே. சுப்பிரமணியம் கோரினர்.

இதனை யுவதியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆட்சேபித்தார்.

இந்த யுவதி தந்தையின் விருப்பத்திற்கு மாறு கநடந்துள்ளார். அத்துடன் நீதிமன்றத்தில் சகல இரகசியங்களையும் வெளியிட்டுள்ளார். ஆகவே தந்தை இவர்மீது மிகுந்த கோபமாக உள்ளார். அவரது பொறுப்பில் யுவதியை விடுவது ஆபத்தானது எனச் சுட்டிக்காட்டினர்.

இறுதியில் நீதிபதி திரு சி. விக்னேஸ்வரன் அக்கோரிக்கையை நிராகரித்தார்.

யுவதியின் தந்தை சார்பில் சட்டத்தரணி எம். கே. சுப்பிரமணியமும், யுவதியினதும், அவரை கடத்தியவர்களினதும் சார்பில் சட்டத்தரணிகள்: ஆர். ஜே. செல்வரத்தினம், திருமதி மோகா நந்திபீரிஸ், திரு. கே. விஜேந்திரா ஆகியோரும் ஆஜராகினர்.

## இளைஞர் கழகம்

(கரவெட்டி

கரணவாய் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் இளைஞர் கழகம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையுடனேயே இந்த இளைஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. (மா)

## சனசமூக நிலைய 32வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

நீராவியடி வண்-வடகிழக்கு சனசமூக நிலைய முப்பத்து இரண்டாவது ஆண்டு விழா இம்மாதம் 25ந் 26ந் திகதிகளில் நிலைய மைதானத்தில் நடைபெறும்.

விழாவில் நாடகம், கவியரங்கு விவாதமேடை, மெல்லிசையுடன் சைக்கிள் ஓட்டப் போட்டியும் மற்றும பல போட்டிகளும் நடைபெறும்.

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு ஸ்ரீ சங்கரநாதர் கணபதிப்பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 19ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், மறுநாட்காலை தீர்த்தோற்சவத்துடனும் விழா முடிவடையும்.

# திருமுறைகளில் இளைஞர்கள் கவனம் செலுத்துகிறார்களில்லையே

[மாவிட்டபுரம்]

''நாயன்மார்களது வரலாறு எமக்கு வழிகாட்டியாக அமைகிறது. அவர்கள் சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திட்டதுடன் இறையருளை நாடும் வழியையும் எமக்கு காட்டிச் சென்றனர். அவர்களது குருபூசைகளை கொண்டாடுவதன் மூலம் அவர்களது பணிகளை நினைவு கூரவும், நமது இளஞ் சந்ததியினருக்கு அவர்களது வரலாறுகளை எடுத்துக் கூறவும் வாய்ப்பு ஏற்படுகிறது,''

இவ்வாறு கூத்தியாவத்தை சனசமூக நிலையத்தின் ஆதரவில் கூத்தியவத்தை விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசை விழாவில் கலந்து சிறப்புரையாற்றிய வீமன்காமம் மகாவித்தியாலய ஆசிரியர் திரு. எஸ். குபேரநாதன் கூறினர்.

நிலையத்தலைவர் திரு. கு. நடேசபிள்ளை தலைமையில் இவ் விழா நடந்தது, ஆசிரியர் தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது:-

''இன்றைய இளைஞர்களுக்கு நாயன்மார்களது வாழ்க்கை வரலாறுகள் திருமுறைகள் பெரும்வரப்பிரசாதமாக இருக்கின்ற போதும். அவர்கள் அதில் கவனம் செலுத்துவதில்லை. இன்றைய சமுதாய சீர்திருத்தத்திற்கு என்ன வேண்டுமோ அதையெல்லாம் அன்றே நாயன்மார்கள் கூறி வைத்துள்ளனர், ஆகவே அதனை நமது இளஞ் சந்ததியினர் பேணிச்சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும். இதுவே ஞானசம்பந்தர் உட்பட மற்றும் நாயன்மார்களுக்கும் செய்யும் சிறந்த அஞ்சலியாகும். (அ)

## விமர்சனக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

'கீற்று' சஞ்சிகையின் விமர்சனக் கூட்டமொன்று எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் கவிஞர் முல்லையூரான் தலைமையில் நடைபெறவுள்ளது.

திருவாளர்கள் காவலூர் ஜெகநாதன், வி.ரி. இளங்கோவன், க. சிவதாசன், எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் விமர்சன உரையாற்றுவர். 'கீற்று' சஞ்சிகையின் இணையாசிரியர்கள் கல்லூரான், ஆர். என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் பதிலுரை நிகழ்த்துவர். (சி)

## சங்கானை அ. மி. பாடசாலையில்

(பண்டத்தரிப்பு)

சங்கானை ஸ்தான அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் திருஞானசம்பந்தர் குருபூசை கொண்டாடப்பட்டது. ஆசிரியர் திரு. ஜி, ஏ. குலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்குருபூசையில் நற்றமிழும் ஞானசம்பந்தரும் என்னும் பொருள்பற்றி ஆசிரியர் திரு. சீ. க. பேரம்பலம் சிறப்புச் சொற்பொழிவாற்றினர், (அ)

## சவூதியில் வேலைவாய்ப்பு

[கொழும்பு]

சவூதிஅரேபியாவில் 2800இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுப்பது சம்பந்தமாக உள்ளூர் வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்று அந்நாட்டுடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது. (வெ)

## 'நிஸ்கோ' பணிப்பாளர் தேர்தல்

(கரவெட்டி)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினுல் யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 'நிஸ்கோ' பிரிவிற்கான பணிப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இம்மாதம் 20ம் திகதி யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிஸ்கோ பிரிவில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளவர்களில் இருந்தே இப்பணிப்பாளர் சபை உருவாக்கப்படவுள்ளது. பணிப்பாளர் சபை இயங்கத் தொடங்கியதும் நிஸ்கோ அங்கத்தவர்களுக்கு தொழிற் திட்டங்களும் உருவாக்கிக் கொடுக்கப்படவுள்ளது.

## உலக சூழல்தினம் கொண்டாடினர்

(பண்டத்தரிப்பு)

சங்கானை ஸ்தான அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் உலக சூழல்தினம் ஆசிரியர் திரு. ஜி. ஏ. குலசிங்கம் தலைமையில கொண்டாடப்பட்டது. வரட்சியைத் தாங்கக்கூடிய முருங்கை, சண்டி போன்ற மரங்களும் நாட்டப்பட்டன. [அ]

## பாரதி நூற்றுண்டு விழா

[யாழ்ப்பாணம்]

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கம் பாரதி நூற்றுண்டு விழாவை இன்று சங்க மண்டபத்தில் கொண்டாடவுள்ளது.

[மா]

## இன்று கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

கன்னுதிட்டி காளிகோவிலில் இன்று பகல் கும்பாபிஷேகம் நிகழும். இரவு பூந்தண்டிகையில் அம்பாள் உலாவருவார்.

[அ]

# "நமது கலைஞர்கள் தமிழகக் கலைஞர்களுக்கு ஈடு கொடுக்கக்கூடியவர்கள்!"

## வட இலங்கை சங்கீதசபை பொன்விழாவில் 'அமிர்'

[யாழ்ப்பாணம்]

''ஈழநாட்டில் எமது இனம் தேசிய இனமாக இருக்கக் கூடிய சகல குணாதிசயங்களை யும் கொண்டிருக்கிறது. இசைத்துறையில் நமது கலைஞர்கள் தமிழகக் கலைஞர்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியவர்களாக விளங்குகிறார்கள்.''

இவ்வாறு எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் வட இலங்கைச் சங்கீதசபை பொன்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மேடையில் இருந்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கல்விப்பணிப்பாளரும் வட இ. ச. சபைத்தலைவருமான திரு. க. சிவநாதன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

மங்கள இசை முழங்க மங்கலதீபம் ஏற்றிவைக்கப்பட்டு வரவேற்புக் கீதம் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து கொக்குவில் கலாபவன மாணவிகள் புஷ்பாஞ்சலி செய்தனர்

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''அண்மைக்காலங்களில் நடைபெற்றுவருகின்ற சம்பவங்களால் ஒருபுறம் பயமும் இப்படியான விழாக்களில் கலந்து கொள்வதால் ஒருபுறம் மகிழ்ச்சியும் என்மனதிலே ஏற்படுகின்றன.

''எமது பண்டைய மன்னர்கள் தமிழரின் டாரம் பரிய மான இசை, நடனம், நாடகம், வைத்தியம், இலக்கியம் ஆகிய கலைகளை வளர்த்துவந்தனர். பின்பு வந்த அந்நியர் ஆட்சியினால் எமது கலைகள் நலிவுற்றபோதிலும் சில குடும்பங்கள் இக்கலைகளைப் பாதுகாத்து வந்தன.

''எமது இனத்தில் கலை சங்கீதம், நடனம் ஆகியவற்றில் கற்றுத்தேர்ந்த மேதைகளைப் பார்க்கும்போது நான் பெருமிதம் அடைகின்றேன். கர்நாடக இசையில் தமிழ்நாட்டுக்கலைஞர்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக நம்மவர்கள் இருக்கிறார்கள்.

''ஈழநாடு பெற்றெடுத்த விபுலானந்த அடிகள், ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை போன்ற அறிஞர்களை தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறியும் யாழ்ப்பாணத்தில் கர்நாடக சங்கீதத்துக்கு தனித்துவமான முக்கியத்துவம் கொடுத்து இச்சபை வளர்த்து வந்திருக்கிறது.

''சங்கீதத்தில் எனக்கு ஞானமில்லை என்றாலும் ரசிக்கத்தெரியும். இதனால்தான் சங்கீத ஆசிரியையாகக்கடமையாற்றவிருந்தவரை எனது துணைவியாராக ஏற்றுக்கொண்டேன். ஆதலால் சங்கீதசபை எனது மாமனார் வீடுபோல் இருக்கிறது. அளவிலாத் தொல்லைகளுக்கும் மத்தியில் எமக்கு இசை ஒருவித ஆறுதலை அளிக்கிறது.''

வ. இ. ச. சபையின் ஸ்தாபகர் அமரர் எம். எஸ். பரம் அவர்களின் உருவப்படத்தை திரு. அமிர்தலிங்கம் திரைநீக்கம் செய்துவைத்தார்.

## "கவின்கலைகளைக் கலைத் திட்டத்தில் நாவலர் இடம்பெறச் செய்தார்"

--கல்வியதிபதி

திரு சிவநாதன் தலைமையுரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

''மனிதனது முருகியல் உணர்வை வளர்க்கவேண்டுமென்று சிந்தித்த நாவலர் பெருமான் இசை, நடனம், சிற்பம், ஓவியம் போன்ற கவின்கலைகளைக் கலைத்திட்டத்தில் இடம்பெறச் செய்தார். நூறு ஆண்டுகளுக்குப் பின், கவின்கலைக்கல்வி இன்று எமது கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. சேர். பொன் இராமநாதனின் கலைப்பணியின் சின்னமாக இன்று பல்கலைக்கழக அந்தஸ்துடன் இராமநாதன் இசைக்கல்லூரிவிளங்குகின்றது. எமது பாரம்பரிய இசை, நடன, சிற்ப, ஓவியப் பெருமைகளையும் தில்லைநடராஜனின் திருநடனத் தத்துவத்தையும் தமது ஆராய்ச்சிகள் மூலமும், நூல்கள் மூலமும் உலகறியச்செய்த பெருமை கலாயோகி ஆனந்த குமாரசாமி அவர்களையே சாரும். 'யாழ் நூல்' தந்து இசையின் பெருமையை, தெய்வீகத்தன்மையை உலகிற்குணர்த்தியவரும் எமது கலை கலாசார மரபுகளைப் பேணிக் காத்தவருமான சுவாமி விபுலானந்தரின் சிந்தனையின் பிரதிபலிப்பாக அண்மையில் கிழக்கிலங்கையில் அவரின் பெயரைக்கொண்டு இசைக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டமை எத்துணைச்சிறப்புவாய்ந்ததுஎன்று எண்ணி இறுமாப்புறுகிறோம்.

''இத்தகைய பெரியோர்களின் கலைகலாசாரப் பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கங்களினதும், உயர்ந்த எண்ணங்களினதும் தாக்கம், நாட்டின் பல இடங்களிலும் ஏற்படத் தொடங்கியது. இசை, நடனம், நாடகம்போன்ற கவின் கலைகளைப் பாதுகாப்பதற்கும் பேணிவளர்ப்பதற்கும் புது மெருகூட்டுவதற்கும் மக்கள் மத்தியில் பரப்புவதற்கும் இயக்கங்கள் தோன்றின.

கலைகளை மக்கள் விரும்பும் கலைகளாகச் செய்யவேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளுடன் வடஇலங்கைச் சங்கீத சபையைத் தோற்றுவித்தார்கள். பொன்விழாக் கொண்டாடும் இந்நேரத்தில் இந்த முன்னோடிகளுக்கு எமது மனப்பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் செலுத்துவது எமது தலையாயகடனும், கடமையுமாகும்'',

## இறந்தும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சபை அளித்த 'வைத்திய ரத்தினம்' என்னும் கௌரவப் பட்டத்தை முன்னாள்சுகாதார அமைச்சர் திருமதி ஒ. யசேசுர அவர்களால் வழங்கிக் கௌரவித்தனர்.

தன்னலம் கருதாச் சேவையாளரான திரு. கனகரத்தினம் 12-6-80 இவ்வுலகை நீத்து அமரத்துவமடைந்தார். அவரின் பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு இவ்வுலகுள்ளவரை நிலைபெறும் என்பதில் ஐயமில்லை.

-தாசன்.

## கலைஞர்களுக்கு பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்க்கலைஞர்கள் நால்வருக்கு வட இலங்கைச் சங்கீத சபையினர் நேற்றுமுன்தினம் பட்டமளித்துக் கௌரவித்தனர் எதிர்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இக்கலைஞர்கட்கு பொன்னாடை போர்த்தி பட்டங்களை வழங்கினார்.

கீதாஞ்சலி வி. கே. நல்லையாவுக்கு ''நாட்டிய ஆசிரிய மணி'' எனவும் பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயருக்கு ''கவிமாமணி'' எனவும் உடுவில் என். சண்முகரத்தினத்துக்கு ''இசைவேந்தன்'' எனவும் கலையரசு திரு. ந சொர்ணலிங்கத்துக்கு 'நடிகசேகரி' எனவும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

திரு. என். சண்முகரத்தினத்தின் சார்பில் அவரின் துணைவியார் பாராட்டுக்களை பெற்றுக்கொண்டார். 90 வயது தாண்டிய கலையரசு திரு. சொர்ணலிங்கம் தம்மால் பிரயாணம் செய்யமுடியாதமை குறித்து சபையினருக்கு முன்பே அறிவித்திருந்தபடியால் விழாவிற்கு சமுகமளித்திருக்கவில்லை. மற்றைய இரண்டு கலைஞர்களும் சமுகமளித்திருந்தனர். (சி)

## சபையின் இன்றைய தலைவர்

செயலாளர் திரு. ஆர். ஸி. மன்மதராயன் பேசுகையில்; ''யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளரான திரு. க. சிவநாதனின் தலைமையில்சபை வேகமாக முன்னேறுகின்றது அவரது அயராமுயற்சியினால் பல நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டு வழிவகைகள் சரியாகச் செயல் படுத்தப்பட்டுவருகின்றன. கடந்த 50 ஆண்டுகளாக வாய்ப்பாட்டு, வாத்தியப் பரீட்சைகள் மாத்திரமே நடாத்தப்பட்டு வந்தன. திரு. க. சிவநாதனின் ஆலோசனையின் பேறாக 1982 முதல் வாய்ப்பாட்டு, வாத்தியங்கள், பரதநாட்டியம், கதகளி நாடகம், பண்ணிசை ஆகிய பல துறைகளில் எல்லாப் பிரிவுகளுக்கும் பரீட்சைகளை நடாத்துவதுடன் பரீட்சைக்குரிய பாடவிதானங்களும் சாதனக் குறிப்புக்கள் அடங்கிய கையேடும் அச்சிட்டு வெளியிடப்பட்டன. இத்தகைய அரியசாதனையை இன்றைய தலைவர் செய்துள்ள இதே சந்தர்ப்பத்திலேதான் சபையின் பொன்விழாக் கொண்டாடப் படுகிறது'' என்றார். [மா-அ

## கிளிநொச்சிஎம்.பி. பாரிஸ் விஜயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்த சங்கரி நேற்று பாரிஸ் பயணமானார்.

பாரிஸ் தமிழ் மன்ற அழைப்பு மீது அங்கு செல்லும் திரு ஆனந்தசங்கரி பாரிஸில் நடைபெறும் பாரதி விழாவில் கலந்து கொள்வார்.

திரு. ஆனந்தசங்கரியை நேற்றுமுன்தினம் தமிழர் விடுதலைக்கூட்டணி இளைஞர்பேரவை உறுப்பினர்கள் கிளிநொச்சியில் வழியனுப்பிவைத்தனர்

## மூன்றுகுண்டு--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முன்பாக மண்மூடைகளுக்கு மத்தியில் குண்டுப் பார்சல் மூடிமறைக்கப்பட்டு, பார்சலில் மின்சார வயர்பொருத்தி இயக்கியபோது ஐந்து நிமிஷ நேரத்துள் 'டமார்' என்ற பயங்கர சத்தத்துடன் அக்குண்டுப் பார்சல் வெடித்தது இச்சத்தம் யாழ்ப்பாணத்தில் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

யாழ் பிரதம தபாலகத்தில் வைக்கப்பட்டிருந்த மூன்று குண்டுப் பார்சல்களில் இரண்டு வெகு நுணுக்கமாக வெடிவைக்கப்பட்டன.

### இரண்டாவது குண்டு வெடித்தது

இராணுவமேஜர் குணவர்த்தன தலைமையில் வந்த இராணுவவீரர்கள் சுற்றிவர நிற்க, இரும்புத் தொப்பியும் முகக் கவசமும் அணிந்த இராணுவ வீரர் ஒருவர் யாழ் தபால் கந்தோருக்கு பின்புறமாக உள்ள வெளியில் அக் குண்டுகளை வெடிக்கவைத்தார்.

தபாலக பின்வெளியில் காலை 11 மணிக்கு வெடிக்கவைக்கப் பட்ட முதலாவது குண்டு 15 நிமிடநேரத்தில் வெடித்தது.

### 3வது வெடி குண்டுப்பார்சல்

3வதுவெடிகுண்டுப் பார்சல் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வெடிக்கவைக்கப்பட்டது. அப் பார்சல் வெடிக்க சுமார் அரை மணித்தியாலத்துக்கு மேல் சென்றது.

### பயங்கர சத்தத்துடன்---

மண்மூடைகளுக்குள் புதைக்கப்பட்டிருந்த அந்தக்குண்டுப் பார்சலை இராணுவ வீரர் நீண்ட கப்பியின் உதவியுடன் வெடிக்கவைத்தார். 'டமார்' என்ற பயங்கரசத்தத்துடன் அக்குண்டு புகையைக் கக்கிய வாறு வெடித்துத்தள்ளியது.

யாழ். பொலிஸ் குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு. கிருஷ்ணதாசன் தலைமையில் பொலீசாரும் வந்திருந்தனர்.

வடமாகாண பிரதம தபால் அதிபர் திரு. எஸ். பி, ஞானப்பிரகாசம், யாழ். தபால் அதிபர் திரு. வி. இராமலிங்கம், இராசாயன நுண்ணாய்வுப் பகுப்பாளர் திரு. எஸ். சிவலோகநாதன் ஆகியோரும் சமூகளித்திருந்தனர். (மா-இ)

## இன்று

(அரியாலை)

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் 'யாழ்ப்பாணத்தில் கண்தானம்' பற்றிய கருத்தரங்கு யாழ். புரியோவான் கல்லூரி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது.

இலங்கை கண்தான சபையுடன் இணைக்கப்பட்ட யாழ். கண்தான சங்கத்தின் ஆதரவுடன் நடைபெறும் இக் கருத்தரங்கில் 'கண்களைத் தானம் செய்கிறேன்' என வாக்குறுதியளித்துக்கையொபமிடும் வைபவமும் நடைபெறும். (அ)

### பரிசளிப்பு

செங்குந்த இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை கல்லூரி முன்றலில் நடைபெறவிருக்கிறது.

யாழ். செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. சு. சிவதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்வைபவத்தில் திருமதி சரோஜினி சிவதாசன் பரிசில்கள் வழங்குவார்கள்

## இல்லப் போட்டி

(அரியாலை)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர்போட்டி இன்று சனிக்கிழமை 'மாலை கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ் கல்வித்திணைக்களப் பொறியியலாளர் திரு. எம். ஏ. பிரான்சிஸ் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினராக மானிப்பாய் வட்டாரக்கல்வியதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் கலந்து கொள்ளுகிறார்.

## றெனி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் வகிப்போரின் பெயர்களை நேற்று சபையில் அறிவித்தார்.

திருவாளர்கள் றெனி டி மெல் தலைவர்), பெஸ்டஸ் பெரேரா, கே. டபிள்யூ. தேவநாயகம், ரணில் விக்கிரமசிங்கா, கொழும்பு மத்தி எம். பி. ஜனுப் ஜாபீர் ஏ. காதர், வத்தளை எம். பி, திரு. ஜோன் அமரசிங்கா. [ம-இ)

## பார்சல்களை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தபால் கந்தோர்களின் ஏனைய பொருட்களுக்குச் சேதம் விளைவிக்கக்கூடியதும் தபால் ஊழியர்களுக்கு தீங்கு ஏற்படுத்தக் கூடியதுமான பார்சல்களை அனுப்புவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (இ)

## அமைச்சர் ---

(1-ம் பக்கத் தொடர்ச்சி

பார்சலும் தடுத்துவைக்கப் பட்டு பொலிசாரிடம் கையளிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பருத்தித்துறை தபால்நிலையத்தைச் சேர்ந்த சி மாணிக்கவாசகர், எஸ். ராஜரத்தினம் ஆகிய இருவரும் மூன்றுமணிநேரம் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.

## சு. கவின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நடவடிக்கையை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

### கூட்டணி எதிர்ப்பு

தெரிவுக்குழு நியமிப்பது தொடர்பான பிரேரணையை ஆதரித்து 106 பேரும் எதிராக 8 பேரும் வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணியும் சுதந்திரக்கட்சியின் சிறிமா பிரிவும் எதிர்த்து வாக்களித்தன. சுதந்திரக்கட்சியின் மைத்திரி குழுவைச் சேர்ந்த திரு. ஆர். பி. விஜயசிறி பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார். திரு, மைத்திரிபால சேனநாயக்கா சபையில் அப்போது இருக்கவில்லை

## நான்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் அறிந்து கொண்டதாகக் கூறி மன்னிப்புக்கோரியிருந்தார். அதனால் அவர் மீதான வழக்கை நான் வாபஸ் பெற்றுக்கொண்டேன் ஆனால் பத்திரிகை ஸ்தாபனம் எனக்கு மூன்று லட்சத்துஐயாரத்து ரூபாய் வழங்குமுன்வந்தது. அதனை ஒரு வங்கி மூலமாகப் பெற்றுக்கொண்டேன். அந்தப்பணத்துக்கு இப்பொழுது மாதம் 60 ஆயிரம் ரூபாய் வட்டிவருகிறது. இன்னொரு கோஷ்டிடமிருந்தும் இப்படியான ஒரு தொகை கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன என்று பிரதமர் கூறினார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63 இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஜூன் மீ 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.